நம்புங்க... அறிவியலை;
நம்பாதீங்க... சாமியார்களை!

# பேய், பில்லி–சூன்யம், பொய்

திராவிடர் விடுதலைக் கழகம்
வெளியீடு

# நம்புங்க... அறிவியலை;
# நம்பாதீங்க... சாமியார்களை!

ஒவ்வொரு நாளும் பத்திரிகைளைப் புரட்டினால்....

தொலைக்காட்சிகளைப் பார்த்தால்....

நெஞ்சம் பதறுகிறது.!

அப்பப்பா.... நம்முடைய மக்களில் பலரும் இந்த அறிவியல் யுகத்திலும் மூடநம்பிக்கைகளில் வாழ்க்கையைத் தொலைக்க வேண்டுமா?

- சாமியார்களிடம் ஏதோ 'மந்திர சக்தி' இருப்பதாக நம்பி ஏமாந்து நிக்குறாங்க...
- பிறக்கப் போவது பெண் குழந்தைகள் என்றால், அந்த மழலையை கருவிலேயே அழிக்கிறாங்க... 10 வயதுலேயே 30, 40 வயது ஆணுக்கு நம்ம பெண் குழந்தைகளை கல்யாணம் கட்டி அவுங்க வாழ்க்கையை பாழடிக்கிறாங்க.
- ''இந்த 'சனியன்' பொறந்ததுலேயிருந்து குடும்பமே விளங்காமல் போச்சு''ன்னு சோதிடக்காரர்கள் பேச்சை நம்பி பெற்ற குழந்தைகளையே சாகடிக்கிறாங்க.

- குடும்பத்தின் பிரச்சினைகள்; மன அழுத்தங்கள்; தங்களை கவனிப்பாரில்லையே என்ற ஏக்கம்; அச்சம்; இப்படி பல்வேறு உளவியல் காரணங்களால் மனநலம் பாதிக்கப்பட்ட நமது சகோதரிகளை மனநல மருத்துவரிடம் அழைத்துப் போகாமல் பேய் பிடிச் சிருக்குன்னு கூறி, 'மந்திரவாதி'களை வரவழைத்து அடிச்சு சித்திரவதை செய்யுறாங்க.
- தொழிலில் இழப்பு; குடும்பத்தில் பிரச்சினை என்றால் குடியிருக்கும் வீட்டுக்கு வாஸ்து சரியில்லைன்னு நம்பிகிட்டு கடனை வாங்கி வீட்டை மாற்றி மாற்றி இடிச்சுக் கட்டுறாங்க.
- குழந்தைகளை சுதந்திரமா வளரவிடாம அறிவியலை முடக்கும் நம்பிக்கைகளைத் திணிக்கிறாங்க...
- எதற்கெடுத்தாலும் 'பரிகாரம்', 'சடங்குகள்' செய்தால் எல்லாம் சரியாயிடும் என்று நம்பி, பிரச்சினைகளிலிருந்து மீளவே முடியாம தவிக்கிறாங்க...

காலம் காலமாக நம் மீது திணிக்கப்பட்ட பல நம்பிக்கைகள் வாழ்க்கையை பாழாக்கி வருவதை நாம் உணர வேண்டாமா?

நாம் அறிவியலை ஏற்று வாழத் தொடங்கிவிட்டால்... மூடநம்பிக்கைகளை விட்டுத் தொலைத்தால்... அப்போது பாருங்கள்....

– வாழ்க்கை தெளிந்த நீரோடையாக மாறும்;

– வாழ்க்கையில் குழப்பங்கள் வராது;

– அறிவியல் நம்மை கைபிடித்து அழைத்துச் செல்லும்;

– நம் சக மக்களையும் நம் சமூகத்தையும் அன்போடு அது அரவணைக்கச் செய்யும்.

அந்த அறிவியல் சிந்தனையை நம் மக்களிடம் கொண்டு செல்லும் முயச்சியே இந்த வெளியீடு; வாங்குங்கள், பரப்புங்கள்!

**– திராவிடர் விடுதலைக் கழகம்**

**தொகுப்பு : விடுதலை இராசேந்திரன்**

# சோதிடத்தை மறுத்த கடவுள் நம்பிக்கையாளர்கள்

கடவுள் நம்பிக்கையாளர்களே சோதிடத்தை நம்ப மறுக் கிறார்கள் – சோதிடம் ஒரு மோசடி என்று கூறியிருக்கிறார்கள்.

**அப்துல் கலாம் :** இந்தியாவின் குடியரசுத் தலைவராக இருந்த அப்துல் கலாம் தனது பதவிக் காலத்தை மக்களின் பாராட்டுகளோடு முடித்துக் காட்டினார். சோதிடத்தில் நம்பிக்கை இல்லாதவர் அப்துல் கலாம். குடியரசுத் தலைவர் பதவிக்கு அவரை வாஜ்பாய் பிரதமராக இருந்த பா.ஜ.க. ஆட்சி தேர்வு செய்தபோதுகூட பதவியேற்பு விழாவுக்கான ஏற்பாடுகளை செய்வதற்கான பொறுப்பு மத்திய அமைச்சர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த அமைச்சர் எந்த நாளில் பதவியேற்பு விழாவை வைத்துக் கொள்ளலாம்; சோதிடப்படி உங்களுக்கு 'நாள் நட்சத்திரத்திற்கு' ஏற்ற நல்ல நாள் எது என்று கேட்டார்.

அதற்கு அப்துல்கலாம் இவ்வாறு பதில் அளித்தார். "பூமி தன்னைத் தானே சுற்றிக் கொண்டிருக்கிறது. அதே நேரம் அது சூரியனையும் சுற்றிக் கொண்டிருக்கிறது.

காலம், நேரம் இரண்டுக்குமே இந்த சுழற்சிதான் காரணம். என்னைப் பொறுத்தளவில் எல்லா நாள்களும் நல்ல நாள்களே. எல்லா நேரமும் நல்ல நேரமே. எந்த நாளும் நேரமும் உங்களுக்கு வசதியோ அன்று பதவியேற்பு விழாவை வைத்துக் கொள்ளலாம்'' என்று பதில் அளித்தார்.

அமெரிக்காவில் அமெரிக்க தமிழ்ச் சங்கப் பேரவை நடத்திய தமிழர் திருநாள் விழாவுக்காக டெல்லியிலிருந்து காணொளி காட்சி வழியாகப் பேசிய அப்துல்கலாம், இத்தகவல்களை அமெரிக்க தமிழர்களிடம் பகிர்ந்து கொண்டபோது கூட்டத்தினர் பலத்த கரவொலி செய்து வரவேற்றனர்.

**திருஞானசம்பந்தர் :** வைணவர்களை சைவ மதத்துக்கு மாற்று வதற்காக பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டவர் திருஞானசம்பந்தர். சைவ மத நம்பிக்கையாளர்களால் அந்த காலத்தில் கொண்டாடப்பட்ட திருஞானசம்பந்தரே சோதிடத்தில் தனக்கு நம்பிக்கை இல்லை என்று பாடல் பாடியிருக்கிறார். மதுரையை ஆண்ட மாறவர்மன் அரிகேசரி என்ற பாண்டிய மன்னன், சைவத்திலிருந்து சமண மதத்துக்கு மாறி விடுகிறார். மன்னரின் மனைவி மங்கையற்கரசி என்பவருக்கு இது பிடிக்கவில்லை. இவரும், பாண்டியர் அமைச்சரவையில் இருந்த குலச்சிறையார் என்ற அமைச்சரும் சேர்ந்து மன்னனை மீண்டும் சைவத்துக்கு மாற்ற 'சித்து மோசடி'களில் கைதேர்ந்த திருஞானசம்பந்தரை மதுரைக்கு அழைக் கிறார்கள். திருஞானசம்பந்தர் மதுரைக்குப் புறப்படத் தயாரானபோது மற்றொரு சைவச் சாமியாரான அப்பர் எனும் திருநாவுக்கரசர், 'சோதிடப்படி இன்று நல்ல நாள் இல்லை; போக வேண்டாம்' என்று தடுக்கிறார். அதற்கு திருஞானசம்பந்தர் அதை எதிர்த்து, ஒரு பாடல் பாடினார். ''உள்ளத்தில் சிவன் குடியிருக்கும்போது ஒன்பது கோள்களும் என்னை ஏதும் செய்யாது'' என்று பாடலில் கூறிவிட்டு பாண்டியநாடு புறப்பட்டார். 'வேயறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்' என்று தொடங்குகிற பாடல் அது.

**பாரதி :** பார்ப்பனக் கவிஞன் பாரதி கூட

*'சோதிடம் தனை இகழ்*
*வான நூல் உயிர் கொள்'*

– என்று தனது புதிய ஆத்திச் சூடியில் எழுதியிருக்கிறார்.

**குன்றக்குடி பொன்னம்பலனார் :** 'சோதிடம்–இராசி பலன்களை நம்ப வேண்டாம்' என்பதை வலியுறுத்தி குன்றக்குடி ஆதீனம் பொன்னம்பலம் அடிகள் ஒரு விழாவில் கூறிய கதை இது:

"ஒரு பிரபலமான சோதிடர் மீது மக்களுக்கு நம்பிக்கை. அவர் கூறுவது எல்லாம் அ ப்படியே நடக்கிறது என்று மக்கள் நம்பினார்கள். அந்த சோதிடரிடம் ஒருவர் குடும்பத்துடன் வருகிறார். தன்னுடைய மகனுக்கு 10 நாட்களாக கடுமையான காய்ச்சல் என்று கூறுகிறார். வேறு ஒருவர் சோதிடரிடம் வந்து, அவரும் தனது மகனுக்கு 10 நாள் காய்ச்சல் என்கிறார். சோதிடம் பார்க்கும் சாமியார் இரண்டு பேரிடமும் 'மந்திரம்' ஓதிய 'கல்' ஒன்றைக் கொடுத்து இதை வீட்டில் கொண்டு போய் வைத்து அடுத்த வாரம் வந்து பார்க்குமாறு கூறினார்.

ஒரு வாரம் கழித்து ஒருவர் வந்து, "சாமி, என் மகன் உங்கள் 'புண்ணிய'த்தில் பிழைத்துக் கொண்டான். இப்போ நல்லா இருக்கான் சாமி" என்றார். உடனே சாமியார், "உன் மகன் உயிர் கல்போல் கெட்டி; அதனால்தான் கல்லைக் கொடுத்தேன்" என்றார்.

மற்றொருவர் வந்து, "சாமி, என் மகன் இறந்து விட்டான்" என்றார். அதற்கு சாமியார், "அது எனக்குத் தெரியும். உன் தலையில் அவன் கல்லைத் தூக்கிப் போட்டு விடுவான் என்பதை உணர்த்தவே கல்லை உனக்குத் தந்தேன்" என்றார். இப்படித் தான் உறுதியான திட்டவட்டமான கருத்துகளை கூறாமல், 'வாய் வித்தை'க் காட்டும் திறமையான மோசடிக்காரர்கள் சோதிடர்கள்" என்றார், பொன்னம்பல அடிகள்.

*பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் சாதகம் பார்க்கிறேன் என்கிறான். அந்தச் சாதகம் பார்ப்பவனிடம் ஒரு குதிரையின் சாதகத்தையும் கழுதையின் சாதகத்தையும் கொடுத்துப் பொருத்தம் பார் என்றால் இது குதிரைச் சாதகம், இது கழுதைச் சாதகம் என்று கூற மாட்டானே! உடனே பொருத்தம் பார்த்து சரியாக இருக்கிறது என்றுதானே கூறுவான்? குதிரை, கழுதைச் சாதகத்துக்கு வித்தியாசம் தெரியாத இவன் எப்படி மனிதனுக்குப் பொருத்தம் கூற முடியும் என்று நம் மக்கள் கொஞ்சம் கூடச் சிந்திப்பதில்லையே!* **– பெரியார், 'விடுதலை' 9.10.1964**

# சோதிடத்தில்
# 9 கிரகங்களில் பூமி இல்லை!

*பேராசிரியர் அருணன் எழுதிய 'மூடநம்பிக்கை களிலிருந்து விடுதலை' நூலிலிருந்து சில பகுதிகள்:*

ஜோதிடம் ஓர்அறிவியல் என்று கதை விடுகிறார்கள். இவர்கள் கொடுக்கிற கணக்குகளைப் போட்டுப் பார்த்துக் கிடைக்கிற பலன்கள் சரியாக இல்லை என்றாலோ கணக்குப் போட்டவருக்கு – ஜோதிடருக்கு – 'கடவுள் அருள்' இல்லை என்று சொல்லி தப்பித்துக் கொள்கிறார்கள். 'ஜோதிடமும் ஒரு விஞ்ஞானமே' என்பது மக்களை ஏமாற்றி இதன்பால் இழுக்க சிலர் போடும் நாடகமே.

எனினும் பலரது நெஞ்சங்களிலும் எழுகிற ஒரு கேள்வி என்னவென்றால் 'கிரகங்களின் அசைவுகளைக் கொண்டு தானே சோதிடம் கணிக்கிறார்கள். நாம் வாழுகிற இந்த பிரபஞ்சத்தில்தானே கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. அவற்றின் நிலை மாற்றங்கள் மனிதனை பாதிக்காதா?' என்பதாகும். இது சற்று விரிவாக விசாரணை நடத்த வேண்டிய விஷயம். முதலில்

கிரகங்கள் குறித்து இந்த ஜோதிட வித்வான்கள் என்ன கூறுகிறார்கள் என்று கேட்போம்.

'சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு,கேது என்று ஒன்பது கிரகங்கள் இருக்கின்றன. இவற்றின் சஞ்சாரத்தைக் கொண்டே ஜோதிடம் கணிக்கப்படுகிறது' என்கிறார்கள்.

ஜோதிடத்தின் இந்த அடிப்படையே அறிவியலுக்கு விரோதமானது. சூரியன் ஒரு கிரகமே அல்ல. அது ஒரு நட்சத்திரம். நட்சத்திரம் என்றால் அது பிரதானமாக ஹைட்ரஜன் வாயுவால் ஆனது. ஒளியையும் வெப்பத்தையும் உருவாக்கவல்லது. ஒரு மாபெரும் அணு உலை என்று சூரியனைக் கூறலாம். இதனைச் சுற்றி செல்லும் கிரகங்கள் அப்படி அல்ல. இவற்றிற்கு சொந்தமாக ஒளியை உருவாக்கும் ஆற்றல் இல்லை. சூரிய ஒளியைத்தான் ஸ்பெஷல் நாடகப் பின்பாட்டுக்காரன்போல வாங்கி விடுகின்றன. கிரகங்கள் சுழன்று வருவதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது கதிரவன் அநேகமாக ஓரிடத்திலேயே இருப்பது எனக் கூறலாம். அதாவது சூரியன்தான் மையம். அதைச் சுற்றித்தான் பல கிரகங்களும் சஞ்சாரம் செய்து கொண்டிருக்கின்றன.

இன்னொரு விஷயம். ஜோதிடத்தில் வரும் இந்த ஒன்பது கிரகங்களில் பூமி இல்லையே கவனித்தீர்களா? விஞ்ஞானத்தின்படி பூமியும் ஒரு கிரகமே. அதுவும் சூரியனைச் சுற்றியே வருகிறது. பிறகு ஏன் அதை நமது ஜோதிட சிகாமணிகள் சேர்க்கவில்லை? காரணம், அந்தக் காலத்தில் பூமிதான் மையம் என்றும், அதைச் சுற்றியே சூரியன் வலம் வருகிறது என்றும் மனிதன் நம்பினான். கண்ணில் கண்ட காட்சியே மெய் என்று நம்பினான். கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய் என்னும் ஞானம் அவனுக்குப் பின்னாளில் ஏற்பட்டது. தீர விசாரித்த பின் உண்மையைத் தெரிந்து கொண்டான். தற்பொழுது பள்ளிப் பாடப் புத்தகத்தில் சூரிய மண்டலம் என்கிற குடும்பத்தில் சூரியனே தலைவன். அவனைச் சுற்றியே பூமி வலம் வருகிறது என்று போட்டிருக்கிறார்கள். ஆனால் சோதிட சாஸ்திரத்திலோ இன்னும் பூமிதான் மையம். அதைச் சுற்றி வரும் ஒரு கிரகம்தான் சூரியன்.

இன்னொரு வேடிக்கையை நோக்குங்கள். ஜோதிட சாஸ்திரத்தில் வரும் ஒன்பது கிரகங்களில் சந்திரனும் ஒன்று. ஆனால் உண்மையில்

சூரியனை மட்டும் சுற்றி வரும் ஒரு கிரகம் அல்ல சந்திரன். மாறாக பூமியைச் சுற்றி வரும் ஒரு துணைக் கிரகம் அது.

ராகு, கேது என்று கிரகங்கள் உண்டு என்கிறார்கள் அல்லவா. அப்படி கிரகங்களே கிடையாது. என்ன செய் வார்கள் ஜோதிடர்கள்? ராகு, கேதுக்கள் நிழல் கிரகங்கள். இவை பின்வந்த மஹரிசிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டன என்று கூறி சமாளிக்கிறார்கள். பின் வந்தவர்கள் ஏற்றுக் கொள்வார்களாம்! ஏன் ஏற்றுக் கொண்டார்கள்? அதற்கெல்லாம் காரணம் கேட்கக் கூடாது. பெரியவங்க தப்புச் செய்தால் அது பெருமாளே செய்ததுபோல.

பூமிக்கு மெர்கசூரி (புதன்), வீனஸ் (வெள்ளி), மார்ஸ் (செவ்வாய்), ஜூபிடர் (வியாழன்), சாட்டர்ன் (சனி), யுரேனஸ் (விண்மம்), நெப்டியூன் (சேண்மம்) என்கிற எட்டு கிரகங்களே சூரியனைச் சுற்றிக் கொண்டிருப்பதாக முதலில் அறியப்பட்டது. 1930இல் புளூட்டோ (சேணாகம்) என்கிற புதுக்கிரகம் கண்டுபிடிக்கப்பட்டது. 1987இல் மேலும் இரண்டு கிரகங்கள் கண்டறியப்பட்டதாக சில வானவியலார் அறிவித்தார்கள். இன்னும் அறியப்படாத கிரகங்கள் சூரியக் குடும்பத்தில் இருக்கக் கூடும் என்றே விஞ்ஞானிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் 'யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ ஆகிய கிரகங்கள் நமது ஜோதிட சாஸ்திரத்தில் சேர்க்கப்படவில்லை!'

ஆக, இல்லாத கிரகங்களைச் சேர்த்தும், இருக்கிற கிரகங்களை விட்டுவிட்டும் ஜோதிட சாஸ்திரம் வகுத்திருக் கிறார்கள். ஜோதிட சாஸ்திரத்தின் அடிப்படையே கோளாறாக இருக்கிறது. இப்படி விஞ்ஞான விரோதச் சிந்தனையில் தயாரிக்கப்பட்ட ஜோதிடம் ஒரு விஞ்ஞானம் தானாம். இந்தக் கூத்தை என்னென்பது!

> *மாடு செத்தால் எடுத்துப் போய் தின்று விடுகிறார்கள். குதிரை செத்தால் சாப்பிடாமல் புதைதது விடுகிறார்கள். இவைகள் சொர்க்கத்தில் இருக்கின்றன; நரகத்தில் இருக்கின்றன என்று எவரும் கருதுவதில்லை. ஆனால் இந்த முட்டாள்தனத்தை மனிதனுக்குத்தான் ஒட்ட வைத்து விட்டார்கள்.* **– பெரியார், 'விடுதலை' 22.11.1972**

# படித்தவர்களை ஏன் 'பேய்' பிடிப்பதில்லை?

பேய், பிசாசு உண்மையா? அறிவியல் ரீதியான ஒரு அலசல்.

பேய், பிசாசு, ஆவிகளை அச்சத்தால் மக்கள் நம்புகிறார்கள். பூசாரிகளைக் கொண்டு அவற்றை விரட்ட முயல்கிறார்கள்.

தற்கொலை செய்து கொண்டவர்கள், பிறரால் கொல்லப்பட்டவர்கள், விபத்தால் இறந்தவர்கள் ஆகியோரே பேயாக, ஆவியாக உலவுவதாகப் பொதுவாக நம்பப்படுகிறது. விபத்தால் அல்லது உணவுக்காக கொல்லப்படும் ஆடுகள், கோழிகள், மாடுகள் போன்ற பிராணிகள் 'ஆவியாக, பேயாக' உலவுவதாகப் பொதுவாக யாரும் அதேபோல் நம்புவதில்லை. கொல்லப்படும் தாவரங்கள் பேயாக, ஆவியாக உலவுவதாக யாரும் நம்புவதில்லை.

இந்தப் பேய், பிசாசு, ஆவிகள் யாரை தொந்தரவு செய்கின்றன தெரியுமா? படித்த அய்.ஏ.எஸ். அதிகாரிகளை, அய்.பி.எஸ். அதிகாரிகளை, மருத்துவர்களை, பொதுவாக படித்த ஆண்களை தொந்தரவு செய்வதில்லை. அதேபோல் பார்ப்பன ஆண்களையும் பெண்களையும் தொந்தரவு செய்வதில்லை. இன்று வரை இவர்களையெல்லாம் ஏன்

பேய், பிசாசு, ஆவிகள் தொந்தரவு செய்யவில்லை என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதே "பேய், பிசாசு, ஆவிகள், கிராமப்புற மக்களை அதிலும் படிப்பு அறிவு இல்லாதவர்களை அதிலும் பெரும்பாலும் பெண்களையே தொந்தரவு செய்வது ஏன்?" இவையெல்லாம் தந்தை பெரியார் இந்நாட்டு மக்களை நோக்கி எழுப்பிய கேள்விகள் ஆகும்.

அடுத்து இந்தப் பேய், பிசாசு, ஆவிகள் ஆகியவற்றின் தொந்தரவுக்கு உள்ளானவர்கள் நிலையைப் பார்ப்போம். இவர்களில் சிலர் பேய், பிசாசு, ஆவியைப் பார்த்ததாகவும் சலங்கை ஒலியைக் கேட்டதாகவும் கடவுள் காட்சி கொடுத்ததாகவும் சொல்வார்கள். இவர்கள் பொய் சொல்லவில்லை. தாம் உணர்ந்ததைச் சொல்கிறார்கள். அப்படியென்றால் இவை யெல்லாம் உண்மையா? அதாவது பேய், பிசாசு, ஆவிகள் இருப்பது உண்மையா? என்ற கேள்விகள் எழலாம்.

மேற்சொன்னவை எல்லாம் புலன்களை ஏய்க்கும் உணர்ச்சிகளே (Deceptive perceptions) ஆகும். இவற்றை அறிவியல் ஆராய்ச்சி முடிவுகள் மூன்று வகையாகப் பிரிக்கின்றன.

1. மாயப் புலன் உணர்ச்சி (Illusion)
2. மயக்கப் புலன் உணர்ச்சி (Hallucination)
3. மருட்சி (Delusion)

### மாயப்புலன் உணர்ச்சிகள்

கண், காது, மூக்கு உள்ளிட்ட அய்ந்து புலன் உணர்வுகளின் அடிப்படையில் மாய உணர்ச்சிகள் அய்ந்து வகையாகப் பிரிக்கப்படுகின்றன. நல்ல வெயிலில் நீண்ட தார்ச் சாலையில் நடக்கும்போது மிகத் தொலைவில் நீர் இருப்பதுபோல் தெரியும். உண்மையில் இருக்காது. இதனைக் கானல்நீர் என்பர். இது கண் உணரும் மாயக் காட்சியாகும்.

நெல்லிக்காய் தின்றபின் நீரைக் குடித்தால் இனிப்பதுபோல் உணர்வர். அதனால் நீர் இனிப்பானது ஆகாது. இது நாக்கின் ஒரு வகை மாய உணர்ச்சி யாகும். இதுபோல் மாய உணர்ச்சிகளை நமது அய்ம்புலன்கள் உணர வாய்ப்பு உண்டு. சரியான ஆய்வின் மூலம் இந்த மாய உணர்ச்சிகளை வெளிப்படுத்தலாம்.

### மயக்கப் புலன் உணர்ச்சி

இயற்பியல் (Physical), வேதியியல் (Chemical), உயிரியல் (Biological) மற்றும் உளவியல் (Physchological) காரணங்களால் உண்டாகும் உணர்ச்சிகளே மயக்கப் புலன் உணர்ச்சிகளாகும்.

## இயற்பியல் காரணங்களால் உண்டாகும் மயக்கப் புலன் உணர்ச்சி

சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த வால்டர்ஹெஸ், அமெரிக்காவின் மிச்சிகன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜேம்ஸ் ஒல்ட்ஸ், யேல் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஜே. டெல்காடோ ஆகியோர் மின் துடிப்புகள் (Electric impulses) மூலம் மூளையில் பல்வேறு கட்டுப்பாட்டுப் பகுதிகளை (controls) தூண்டிவிட்டு சினம், அச்சம், பசி, வருத்தம், துக்கம், துயரம், எக்களிப்பு, காதல், காமம், ஆர்வம், ஆக்கிரமிப்பு உணர்ச்சி, நட்பு, விருப்பு, வெறுப்பு, இன்பம், துன்பம் போன்றவற்றை சாதாரண நடைமுறையில் வாழ்வில் உணர்வதுபோல் செயற்கையாகத் தூண்டும் முயற்சியில் இறங்கி அதில் வெற்றி பெற்றுள்ளனர்.

தாளக் கட்டமைந்த பறையோசை, சீராகக் கைதட்டும் ஓசை, மந்திர உச்சாடணம், பண்ணோடு இசைந்த பாடல், பாடல் ஒப்புவித்தல், ஒலி முழக்கமிடல், நடனம், அங்க அசைவுகள், கண்களில் மாற்றி மாற்றி வெளிச்சத்தையும் இருட்டையும் உருவாக்குதல், ஒரு பொருளை உற்று நோக்கல், ஜோதி, படிகம் (Crystal), மை போன்றவற்றை உற்றுநோக்கல் போன்ற செயல்கள் மூலம் மயக்கப்புலன் உணர்ச்சி அனுபவங்களை உண்டாக்க முடியும்.

பேய் ஆட்ட அங்க அசைவுகள், முகச் சுழிப்புகள், காவடியாட்டம், கரக ஆட்டம், ஆலய பூசை, அங்க அசைவுகள், பெந்தகோஸ்ட் எனும் கிறித்துவப் பிரிவினரின் பக்தி அசைவுகள், உடல் முறுக்கு நடனம், பாப் இசை நடனம் போன்றவை நரம்பு மண்டல இயக்கத்தின் சந்த இசைத் தூண்டல்களே (Rythmical stimulations of the nervous system) ஆகும். இதற்குப் பெயர் மயக்கப்புலன் உணர்ச்சி.

## உளவியல் காரணங்களால் தோன்றும் மயக்கப் புலன் உணர்ச்சிகள்

மனிதர்களின் குறிப்பிட்ட வித்தியாசமான நடத்தைப் போக்குகள் அவர்கள் உடலிலுள்ள குரோமோசோம்கள் (Chromosomes) உடன் தொடர்புடையவை என்று கனடா நாட்டைச் சேர்ந்த ஆர்லண்டோமில்வரும், பேரா. ஆலன்பிஷரும் கண்டுபிடித்துள்ளனர்.

உடலில் சிலவகை வைட்டமின்கள், நொதிகள் (Enzymes) போன்ற பற்றாக்குறையின் காரணமாக மனக் கோளாறுகள் உண்டாக முடியும்.

வைட்டமின் 'பி' குறைவின் காரணமாக 'பெரி பெரி' என்னும் மனநோய் உண்டாகும். மனப் பிறழ்வான நடத்தை இந்நோயின் இன்றியமையாத

அறிகுறியாகும். வைட்டமின் குறைவால் ஏற்படும் நோய்களில் ஒன்று 'பெல்லாக்ரா' ஆகும். உடலில் உள்ள சில சுரப்பிகளின் கோளாறு காரணமாகவும் சில மன நோய்கள் உண்டாகும். எண்டாக்கிரினல் சுரப்பிக் (Endocrinal Gland) கோளாறு காரணமாக ஒரு குறிப்பிட்ட மன நோய் உண்டாகும். பாரா தைராய்டு சுரப்பி (Parahyroid Gland) குறைவாகச் சுரப்பதால் மயக்கக் காட்சிகள் அதிகம் தெரியும்.

மனித மனமானது கருத்தேற்றங்களினால் (Suggestions) பாதிக்கப்படக் கூடும் என்பது உளவியல் உண்மையாகும். இத்தகைய கருத் தேற்றங்கள் தன் கருத்தேற்றம் (Auto-suggestion), அல்லது தன் வசியம் (Auto-hypnosis) என்றும், அயல்வசியம் (Hetero-hypnosis) என்றும் இரு வழியில் நடைபெறும்.

மதக் கருத்துக்களை ஊட்டுதலும், மூளைச் சலவை (Brain washing) செய்தலும் மெதுவான தொடர்ச்சியான மன வசிய முறையாகும். பேய், பிசாசு, ஆவி தொடர்பான கருத்துகள் இத்தகைய முறையில் சிறு பிள்ளையிலிருந்தே மனதிற்குள் திணிக்கப்படுகின்றன.

பேய் பிடித்தவரைப்போல் பிதற்றுதல், வேற்று மொழியில் பேசுதல், சாமி வந்து ஆடுதல் போன்றவை எல்லாம் மேற்சொன்ன கருத்தேற்றங்களின் விளைவுகளே ஆகும்.

இதில் பேய் பிடித்து வேற்று மொழியில் பேசுபவர் குளோசோலேலியா (Clossolalia) எனும் மனநோயால் பாதிக்கப்பட்டவர் ஆவார். இவர்கள் வாயில் 'அயல் மொழி' போல் வெளிப்படுவது உண்மையில் அயல்மொழி அல்ல என்பதனை அந்தக் குறிப்பிட்ட மொழி தெரிந்தவரை அருகில் வைத்து நிரூபிக்கலாம்.

சாதாரணமாகக் கண் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு கண் மருத்துவரை அணுகுவர். தோல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு தோல் மருத்துவரை அணுகுவர். ஆனால் மனம் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு மனநோய் மருத்துவரை அணுகாமல் பேய், பிசாசு, ஆவி விரட்டும் செயலில் ஈடுபடுவது அறிவுடைமை ஆகாது.

### மருட்சிகள்

சிறு பிள்ளையிலிருந்து பொய்யான கருத்துகளை மனதில் திணித்து வந்ததன் விளைவாக ஏற்படுவதே மருட்சியாகும். பேய், பிசாசு, ஆவிகள், ஜோதிடம், கைரேகை, மறுபிறப்பு, மந்திரம் போன்றவையெல்லாம் இந்த மருட்சிகளில் அடங்கும்.

மேற்சொன்னவற்றிலிருந்து படிப்பு, அறிவு இல்லாத கிராம மக்களே பெரும்பாலும் பேய், பிசாசு, ஆவி தொந்தரவுகளுக்கு உள்ளாவதன் காரணங்கள் தெளிவாகின்றன. இத்தகைய நிகழ்ச்சிகள் நடக்கும் கிராமங்களுக்குப் பகுத்தறிவாளர் குழு நேரில் சென்று ஆய்வு செய்ததும் உண்டு. உதாரணமாக ஆந்திர மாநிலத்தில் 1983இல் மேடக் மாவட்டத்தில் 'பனிமதி' என்ற பெயரில் பேய், பிசாசு, பில்லி சூனியங்களுக்கு பல கிராமங்களில் மக்கள் பலியாகி, பலர் உயிருடன் எரிக்கப்பட்டும் சிலர் இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி மக்களை ஏமாற்றி பணம் பறிக்க மாவட்ட காவல்துறைக்கு இது ஒரு பெரும் சட்ட ஒழுங்கு பிரச்சினையாகிவிட்டது. உடனே மாவட்ட காவல் அதிகாரி விஜயவாடாவில் உள்ள நாத்திக மய்யத்திற்கு அழைப்பு விடுத்தார். அங்கிருந்து ஒரு மனநோய் மருத்துவர், இரண்டு பொது மருத்துவர்கள், ஒரு இயற்பியல் அறிஞர், ஒரு சமூகவியல் அறிஞர், ஒரு மனோவசிய அறிஞர், ஒரு 'மாஜிக்' நிபுணர் மற்றும் சில சமூக சேவகர்கள் அடங்கிய ஆய்வுக் குழு மேற்சொன்ன கிராமங்களுக்குச் சென்று ஆய்வு செய்தது. யார், யார், என்னென்ன நோய்களுக்கு உள்ளாயினர், எவையெவை மோசடி வேலை என்பதையெல்லாம் கண்டறிந்து அறிக்கை மூலம் வெளிப்படுத்தினர்.

பேய், பிசாசு, பில்லி சூனியம் ஒரு சமூகக் கலாச்சார நம்பிக்கையாக இருந்தது என்றும் பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் உளவியல் காரணங்களே இந்த மூடநம்பிக்கைகளை உருவாக்கின என்றும் ஆய்வின் முடிவில் வெளிப்படுத்தினர்.

படிப்பறிவற்ற கிராமப்புறப் பெண்களை 'பேய் பிடிப்பதற்கு' ஒரு குறிப்பிட்ட காரணம் உண்டு. பருவம் அடையும் கிராமப்புறப் பெண்ணுக்குத் தனது உடலில், உணர்வில் ஏற்படும் மாற்றங்களைப்பற்றி சரியான விளக்கம் பெறுவதற்கு வாய்ப்பில்லாத நிலையில் அதனால் மனநோய்க்குள்ளாகி 'பேய்' பிடிப்பது உண்டு. அடுத்து 'பாலியல்' உடலுறவு, குழந்தை பிறப்பு பற்றிய அடிப்படைத் தகவல்கள் சரியாகத் தெரியாத பெண் திருமணம் செய்து கொண்டு, விவரமற்ற கணவனால் கட்டாய உடலுறவுக்குள்ளாகி, திகில் அடைந்து மனநோய்க்குள்ளாகி 'பேய்' பிடிப்பதும் உண்டு. இரண்டு, மூன்று குழந்தைகள் பிறந்தவுடன் இந்த 'பேய்'கள் ஓடிவிடும். ஆக இவையெல்லாம் அறியாமையால் விளைந்த மனக்கோளாறுகளே சரியான மனநோய் மருத்துவரை அணுகி எளிதில் குணப்படுத்தக்கூடிய இந்த வகைக் கோளாறுகளை 'பேய்' பிடித்ததாகச் சொல்லி ஏமாறுவதும், ஏமாற்றுவதும் இனியும் நடைபெற நாம் அனுமதிக்கக் கூடாது.

இத்தகைய அறிவியல் கருத்துகளை மக்களிடம் பரப்பி வந்த மராட்டிய பகுத்தறிவாளர் தபோல்கர், மதவெறியரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

# பின்னால் துரத்தி வந்த கர்ப்பிணியின் பேய்...!

**கா**லி ரிச்மண்ட் கல்லூரியில் கோவூர் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண் டிருந்த காலம். 1946ஆம் ஆண்டு பல்கலைக் கழக நுழைவுக்காகப் பயின்று கொண் டிருந்த சில மாணவர்களுக்கு சனிக் கிழமைகளில் விசேட வகுப்புகளை நடத்திக் கொண்டிருந்தார் கோவூர்.

மே மாதத்தில் ஒரு சனிக்கிழமை வகுப்பு முடிந்து மாணவர்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். ஜயசிங்கா என்ற மாணவன் கோவூரிடம் வந்தான். 'என்ன விஷயம்' என்று கேட்டார்.

தன் தந்தை ஒரு அரசாங்க அதிகாரி என்றும், அவரிடம் கடமை புரியம் ஒரு பியூன் ஆறு மாதங்களுக்கு முன்பு இறந்துபோன கர்ப்பிணியான ஒரு மீனவப் பெண்ணின் ஆவியால் பீடிக்கப்பட்டு அந்தப் பெண்ணைப் போன்றே பிதற்றிக் கொண்டிருப்பதாகவும் கூறினான். தன் வீட்டுக்கு இரு வீடுகள் தள்ளியே அந்தப் பியூனின் வீடு இருப்பதாகவும் அவன் சொன்னான்.

மேலும் விசாரித்தபோது, அந்தப் பியூனின் பெயர் பீட்டர் என்றும், சமீபத்தில் திருமணமாகித்

தேன்நிலவுக்குச் சென்று திரும்பியவன் என்றும் தெரிய வந்தது. மூன்று வாரங்களாக அவனது நிலைமை மோசமாகிவிட்டதென்றும் கூறப்பட்டது.

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை, ஜயசிங்காவையும் அழைத்துக் கொண்டு பீட்டரின் வீட்டுக்குச் சென்றார் கோவூர்.

அப்போது காலை பத்தரை மணி இருக்கும். காலி கொழும்பு சாலையில் ஒரு ஒழுங்கையில் ஜயசிங்காவின் வீடும், பீட்டரின் வீடும் அமைந்திருந்தன. இந்த ஒழுங்கையை ஒட்டித்தான் 'தடல்ல' சுடுகாடும் இருந்தது. 'தடல்ல' சுடுகாடு என்றாலே அப்பகுதி மக்கள் நடுங்கு வார்கள். அங்கு பேய்கள் உலவுவதாக மக்கள் நம்பினர். அந்தச் சுடுகாட்டையும் ஜயசிங்காவின் வீட்டையும் கடந்து பீட்டரின் வீட்டை அடைந்தனர். வீட்டு வராந்தாவில் ஒரு ஸ்டூலில் பீட்டர் அமர்ந்திருந்தான்.

கோவூர் அருகில் சென்றபொழுதுகூட பீட்டர் அவரை அவதானிக்க வில்லை. ஒருவித வெறித்த பார்வையை எங்கோ செலுத்திய வண்ணம் இருந்தான்.

அருகில் சென்ற கோவூர் எத்தனையோ கேள்விகளைக் கேட்டார். ஆனால், பீட்டர் இலட்சியம் செய்ததாகவே தெரியவில்லை. அடுத்து ஜயசிங்காவின் வேண்டுகோளுக் கிணங்க பீட்டரின் இளம் மனைவி வெளியே வந்தாள். அவளிடம் நடந்தது என்னவென்று கோவூர் கேட்டார். அவளும் நடந்த கதையைக் கூறினாள்.

ஏப்ரல் மாதம் 19ஆம் தேதி இரவு 8.30 மணி இருக்கும். வீட்டில் மண்ணெண் ணெய் தீர்ந்துவிட்டது. விளக்குகள் அணைந்துவிடக் கூடிய சூழ்நிலை உருவாகி விட்டது. சமையலறையில் வேலையில் ஈடுபட்டிருந்த பீட்டரின் இளம் மனைவி கணவனை அழைத்து நிலைமையைக் கூறினாள். கடையில் போய் ஒரு பாட்டில் மண்ணெண்ணெய் வாங்கி வரும்படியும் வற்புறுத்த ஆரம்பித்தாள். பீட்டருக்கு முதலில் தயக்கமாகத்தான் இருந்தது. அவனுக்கு 'தடல்ல' சுடுகாடு பற்றிய பயம் நினைவுக்கு வந்திருக்க வேண்டும். அவனின் மனைவி ஊருக்குப் புதியவ ளென்பதால் 'தடல்ல' சுடுகாட்டைப் பற்றி எதுவும் விசேடமாக அறிந்திருக்கவில்லை. தனது பய உணர்ச்சியை மனைவிக்குக் காட்டிக் கொள்ளவும் பீட்டர் விரும்ப வில்லை. தென்னை ஓலைகளைக் கொண்டு பந்தமொன்றைக் கட்டிக் கொண்டு கடைக்குப் புறப்பட்டான்.

வீட்டைவிட்டுப் புறப்படும்போதே சப்தமிட்டுப் பாடியவாறே அவன் கடைக்குச் சென்றான். பேய்களை விரட்டவே அவன் அப்படிப் பாடிக் கொண்டு சென்றான். கடைக்குப் போய் திரும்பும் பொழுதுதான் விஷயம் விபரீதமாகிவிட்டது. அவன் கையிலிருந்த தென்னை ஓலைப் பந்தம் எரிந்து சாம்பலாகித் தீர்ந்துவிட்டது. சிறிது நிலவொளி இருந்ததால், பீட்டர் இருட்டில் வேகமாக வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான். அந்த சந்து வீதி முழுவதும் காய்ந்த இலைச் சருகுகள் நிறைந்திருந்தன. அவன் நடக்க ஆரம்பித்ததும் சருகுகள் சர சரக்கத் தொடங் கின. திடீரெனப் பீட்டரின் பின்புற மிருந்து சருகுகள் சரசரக்கும் ஓசை கேட்டது. பீட்டர் நெஞ்சு படபடக்க நின்றான். அந்த ஓசையும் நின்றது. மெதுவாகத் திரும்பிப் பார்த்தான்.

அங்கே...!

இறந்துபோன ஒரு கர்ப்பிணி மீனவப் பெண்ணின் ஆவி நின்று கொண்டிருந்தது. பீட்டர் வேகமாக நடக்க ஆரம்பித்தான். அந்தப் பேயும் வேகமாகப் பீட்டரைத் துரத்த ஆரம்பித்தது. பீட்டர் ஓடினான். அந்தப் பெண் பேயும் பின்னால் ஓடிச் சென்றது. பீட்டர் வேகமாக ஓடி தனது காம்பவுண்டை அடைந்ததும் திரும்பிப் பார்த்தான். அங்கே தன்னை துரத்தி வந்த பெண் பேயைக் காணவில்லை. பெருமூச்சு வாங்க பயத் துடன் நடுங்கியபடி ஓடியவன், தனது வீட்டு வராந்தாவில் மயங்கி விழுந்துவிட்டான். மயக்கம் தெளிவிக்கப்பட்டதும் நடந்த வற்றைக் கூறி பீட்டர் பிதற்ற ஆரம்பித்தான். இறந்து போன கர்ப்பிணிப் பெண்ணைப் போல் அவன் பேச ஆரம்பித்து விட்டான். அவனது மனைவி தனது மாமனாருக்குத் தகவல் அனுப்பினாள். பெரியவர்கள் வந்ததும் பல மாந்திரீகர்களை அழைத் தனர். பல பூஜைகள் நடத்தப்பட்டன.

ஒரு நாள் பூஜையின்போது பீட்டரின் உருவில் அந்தப் பெண்ணின் ஆவி பேசியது. ‘‘எனது கணவர் நான் இறந்ததும் இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். அந்தப் புது மனைவி என் பிள்ளைகளை நன்றாகக் கவனிக்கிறாளா என்பதைப் பார்க்கவே வந்தேன்.’’

பீட்டரின் மனைவி கதையைக் கூறி முடிக்கும்பொழுது பகல் 12 மணியாகி விட்டது. ஜயசிங்காவின் தம்பி வந்து கோவூரையும், ஜய சிங்காவையும் சாப்பாட்டுக்கு அழைத்தார். சிறிது நேரம் கழித்து மீண்டும்

வருவதாகப் பீட்டரின் மனைவியிடம் கூறிவிட்டு அவர்கள் ஜயசிங்காவின் வீட்டுக்குச் சென்றார்கள்.

ஜயசிங்காவின் தாய் உணவு பரிமாறிக் கொண்டிருந்தார். ஜயசிங்கா அவனுடைய தந்தை, கோவூர் ஆகியோர் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். ஜயசிங்காவின் பெற்றோர் பீட்டரின் நிலையைப் பற்றிக் கேட்டனர். இந்த நிலையில் எந்த முடிவுக்குமே வர முடியாது என்று கூறிய கோவூர், பீட்டரின் மனைவி கூறியதை அப்படியே கூறினார். கோவூர் கதையை முடிக்கவில்லை.

ஜயசிங்காவின் தாய் திடீரெனச் சத்தமிட்டார். 'எனக்கு இப்பொழுது தெரிகிறது, நம்ம லில்லிதான்' என்று பலமுறை கத்தினார். 'லில்லியா?' வியப்புடன் விழித்தார் கோவூர்.

'ஆமாம், நம்ம லில்லிதான்' என்று கூறிய அந்த அம்மாள், 'நீங்கள் கூறும் தேதியில் இரவில் ஓடிவந்தது எங்கள் வீட்டு வேலைக்காரப் பெண் லில்லிதான்' என்றார். கோவூருக்கு ஒரே குழப்பமாக இருந்தது. உடனே சாப்பிடுவதை நிறுத்திவிட்டு, 'கூப்பிடுங்கள் அந்த லில்லியை' என்றார். சமையலறையிலிருந்து லில்லி அழைக்கப்பட்டாள். சுமார் இருபது வயது மதிக்கத்தக்க அழகான தோற்ற முடைய லில்லி வந்தாள். லில்லியை உற்று நோக்கியபடி கோவூர் கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தார்.

லில்லியும் ஏப்ரல் மாதம் 19ஆம் தேதி நடந்தவற்றைக் கூறினாள்.

''அய்யா, எனது ஊர் மாத் தலை, சிங்கள புது வருடத்தை முன்னிட்டு ஏப்ரல் மாதம் 11ஆம் தேதி வீடு சென் றேன். ஏப்ரல் மாதம் 19ஆம் தேதிதான் காலிக்குத் திரும் பினேன். வழமை யாக அங்கு பிற் பகல் புறப்பட்டால் மாலை 5 மணிக்கு இங்கு வந்துவிடலாம். அதேபோன்றுதான் இந்த முறையும் நான் புறப்பட்டு வந்தேன். ஆனால், வரும் வழியில் நான் வந்த பேருந்து பழுதாகி பல இடங்களில் நிறுத்தப்பட்டது. இதனால் இரவு 7.30 மணிக்குப் பின்னால் தான் தடல்லையை வந்து அடைந்தேன். பேருந்திலிருந்து இறங்கிய எனக்கு அந்த சுடுகாட்டு வழியாகப் போகப் பயமாக இருந்தது. இதே நேரத்தில் எந்த ஆணையும் நம்பி எனது நிலையைக் கூறவும் நான் விரும்பவில்லை. இதனால், அந்த ஒழுங்கை ஆரம்பமாகும் இடத்தில் நிற்கும் புன்னை மரத்தின் கீழ் சத்தமில்லாமல் நின்று கொண்டு யாராவது அந்த வழியாகப் போகமாட் டார்களா? அவர்கள் பின்னாலேயே போய் விடலாமே என்று எதிர்பார்த்துக் கொண் டிருந்தேன்.

இப்படி சுமார் அரை மணி நேரம் கழிந் திருக்கும். பீட்டர் கடைக்குப் போவதைப் பார்த்தேன். அவர் திரும்பும் வரை அமைதியாக இருந்தேன். வெளிச்சத்துடன் சென்ற பீட்டர் இருட்டில் திரும்பினார். அவரை முன்னால் விட்டு நான் சிறிது இடைவெளிக்குப் பின் அவரைத் தொடர்ந்து சென்றேன். அந்த இருட்டு வேளையில் பீட்டரை நெருங்கிச் சென்றால் என்னை அடையாளம் கண்டு கொண்டு அந்த இருட்டு வேளையில் என்னிடம் தப்பாக நடந்து கொள்வாரோ என்ற பீதியில்தான் சிறிது இடைவெளி விட்டு அவர் பின்னாலேயே சென்றேன். திடீரெனப் பீட்டர் நின்றார். நான் பயத்துடன் நின்றேன். அவர் ஓட ஆரம்பித்தார். நானும் அவர் பின்னாலேயே ஓடி எங்கள் வீட்டுக்குள் வந்து விட்டேன். பீட்டர் நேராக ஓடிவிட்டார். என்னை எஜமானி அம்மா தனியாக வந்ததற்காக ஏசினார்கள். நான் பீட்டரைப் பின்தொடர்ந்து வந்த கதையை அவரிடம் சொன்ன பிறகு சமாதானம் அடைந்தார்.''

இப்படி லில்லி தன் கதையைச் சொல்லி முடித்தாள்.

தன்மானத்துக்குப் பயந்து லில்லி ஒரு ஆணை நெருங்கி வர விரும்பாது, புத்திசாலித்தனமாகப் பீட்டருக்குச் சிறிது தூரத்தில் வந்ததால் கோழை மனம் கொண்ட பீட்டர், இந்தப் பரிதாபத்திற்கு ஆளாகியிருப்பது கோவூருக்கு தெளிவாகி யது.

சருகுகளின் ஓசையைக் கேட்டதும், பீட்டர் திரும்பிப் பார்த்திருக்கிறான். அங்கே ஒரு பெண் நிற்பது தெரிந்தது. மீனவப் பெண்ணின் ஆவியைப் பற்றியே நினைத்துக் கொண்டு இருட்டில் சென்ற பீட்டர், பின்னால் நின்ற பெண்ணைக் கண்டதும் அது மீனவப் பெண்ணின் ஆவியென்று நினைத்து விட்டான். அவனது மூளை பாதிக்கப்பட்டுவிட்டது.

பயத்தால் வேகமாக நடந்தான் பீட்டர். அவன் பின்னாலேயே போய்விட எண்ணி லில்லியும் வேகமாக நடந்தாள். அடுத்து பீட்டர் ஓடினான். லில்லியும் பின்னால் ஓடினாள். இங்குதான் ஒரு முக்கிய விஷயத்தைக் கவனிக்க வேண்டும். லில்லியின் வீடு முன்னால் இருந்ததால் லில்லி தன் வீட்டுக்குள் நுழைந்துவிட்டாள்.

தனது வீட்டு காம்பவுண்டுக்குள் நுழைந்த பீட்டர் திரும்பிப் பார்த்தபோது பின்னால் வந்த ஆவியைக் காணவில்லை. அதனால் அதிர்ச்சியடைந்துவிட்டான். இந்த அதிர்ச்சியால் வராந்தாவை

நெருங்கியதும் மயங்கி விழுந்து விட்டான். ஒரு சில வினாடிகளில் இவ்வளவு விஷயங்களும் கோவூருக்கு புரிந்து விட்டன. அதிர்ச்சியால் பீட்டரை 'குளோசொலேலியா' (Glossiolalia) என்ற மனநோய் பற்றிக் கொண்டது.

இந்த வியாதி பிடித்தவர்கள் தாங்கள் நினைத்ததைப் போன்றே பேசுவார்கள், நடிப்பார்கள். இதனால்தான் பீட்டர் அந்த மீனவப் பெண்ணைப் போன்றே பேசவும், பிதற்றவும் ஆரம்பித்திருக்கிறான். இதுவும் கோவூருக்குப் புரிந்தது.

அடுத்து, லில்லியையும் குடும்பத் தினரையும் பீட்டரின் வீட்டுக்கு அழைத்துச் சென்றார் கோவூர். லில்லியை முழுக் கதையையும் பீட்டர் மனைவியிடம் கூற வைத்தார். பின்பு தடல்ல சுடுகாடு, பயங்கரப் பேய் உலாவும் இடம் இல்லையென்பதை விளக்கினார். தன் பிறகு பீட்டருக்கு ஹிப்னாடிஸ் முறையில் சிகிச்சை அளித்தார். அவனும் குணமடைந்தான். அன்று பயங்கரமென்று வர்ணிக்கப்பட்ட தடல்ல சுடுகாடு, இன்று ஒரு விளையாட்டு மைதானம் போன்று ஆகிவிட்டது.

## காந்தியின் ஆயுளை பொய்யாக்கியது சோதிடம்!

*மக்களின் அறியாமையையும் மூடநம்பிக்கையையும் பயன் படுத்தி வெளி வந்த இதழ்களுள், 'பாரத தேவி' என்ற சோதிட இதழும் ஒன்றாகும். இந்நூலின் 16.8.1947-ந் தேதி இதழில் காந்தியைப் பற்றி, 'புகழ் பெற்ற' சோதிடரான வி.கே. கிருஷ்ண மாச்சாரி என்பவரால் ஒரு சோதிடக் கணிப்பு வெளியிடப்பட்டுள்ளது.*

*"காந்தியடிகள் பிறந்தது சிம்ம லக்கனம், மக நட்சத்திரம். விடியற் காலம் மக நட்சத்திரத்தில் ஜனித்தவர்களுக்கு தீர்க்காயுள் யோகம் உண்டு. இதேபோல் சிம்ம லக்கனமும் நீண்ட ஆயுள் தரக் கூடியது."*

*"மேலும் ஜன்ம லக்கனம், சிம்மமாகவும், அதில் சந்திரன் ஆயுள் ஸ்தானாதிபதியான குரு தசம கேந்திரத்தில் நின்று லக்னாதிபதியான சூரியனையும், ஆயுள்காரனாகிய சனியையும் பார்ப்பதனாலும் பரமாயுள் என்ற கணக்கான 120 வருஷங்கள் மகாத்மாவுக்கு ஆயுள் உண்டு."*

*சோதிடம் பொய்த்தது. காந்தி வாழ்ந்தது 78 ஆண்டுகள்தான். ஒரு சோதிடர்கூட காந்தி சுட்டுக் கொல்லப்படுவார் என்று கூறவும் இல்லை.*

# உலகம் – உயிர் – சாதி தோன்றியது, இப்படித்தான்!

ஆதாரங்களுடன் அறிவியல் கூறும் ஆராய்ச்சி முடிவுகளின்படி பிக்பேங்க் என்ற பெரிய வெடிச் சிதறல் காரணமாக இந்த ‘அண்டம்’ என்னும் பிரபஞ்சம் தோன்றி 1500 கோடி ஆண்டுகள் ஆகின்றது. அதன் தொடர்ச்சியாக விண்மீன் (நட்சத்திர) மண்டலங்களும் (கேலக்ஸி), அவற்றின் விண்மீன்களும் தோன்றின. இந்த அண்டத்தில் கோடானுகோடி விண்மீன்களை உள்ளடக்கிய கோடிக்கணக்கான விண்மீன் மண்டலங்கள் உள்ளன என்பதைத் தெளிவாக நாம் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு உருவான விண்மீன் மண்டலங்களில் ஒன்றுதான் நமது கதிரவ விண்மீனை (சூரிய நட்சத்திரத்தை) உள்ளடக்கிய பால்வெளி விண்மீன் மண்டலம் (மில்கி வே கேலக்ஸி) ஆகும். நமது இந்தப் பால்வெளி விண்மீன் மண்டலத்தில் மட்டும் நம் கதிரவனைப் போன்ற 20000 கோடி விண்மீன்கள் உள்ளன. பால்வெளி விண்மீன் மண்டலத்திலுள்ள நம் கதிரவ விண்மீன் தோன்றி இன்றைக்கு 500 கோடி ஆண்டுகள் ஆகின்றது. இன்னும் 600 கோடி ஆண்டுகளுக்குப் பிறகு நமக்கு ஒளி தந்து நம் உயிருக்கு ஆதாரமாக இருக்கும் இந்தக் கதிரவன்

மூலப் பொருள்களின்றி அழிந்து போகும் என்பது அறிவியல் உண்மை! கதிரவத் துகள்களிலிருந்து உருவான நம் உலகம் தோன்றி ஏறக்குறைய 475 கோடி ஆண்டுகள் ஆகின்றது. இதுதான் உலகம் தோன்றிய வரலாறு.

## உயிர் தோன்றி மனிதன் உருவான வரலாறு

475 கோடி ஆண்டுகளுக்கு முன்பு உருவான நம் உலகில் முதல் 150 கோடி ஆண்டுகளுக்கு எந்த உயிரினமும் உண்டாகவில்லை. பின் முதன்முதலாக பல கோடி ஆண்டு வேதியியல் மாற்றங்களின் காரணமாக கடலுக்கடியில் ஒரு செல் உயிரினம் உண்டானது. அந்த முதல் உயிரினம் ஏதோ ஒரே நாளில் இயற்கைக்குப் புறம்பான தெய்வீக சக்தியால் உருவாக்கப்பட்டது என்று யாராவது கருதுவீர்களானால் அவர்கள் மீது நாம் அனுதாபப்பட முடியுமேயல்லாது வேறொன்றும் செய்ய இயலாது. 150 கோடி ஆண்டு வேதியல் மாற்றங்களின் (Organic Evolution) விளை பொருள்தான் அந்த முதல் உயிரினம். இப்படியாகக் கடலில் உருவான ஒரு செல் உயிரினம் கோடிக்கணக்கான ஆண்டு படிநிலை வளர்ச்சியின் காரணமாகப் பலசெல் உயிரினமாகி பின் நீரில் மட்டும் வாழக்கூடிய மீனினமாகி (Fishes) அதன் பிறகு இன்னும் கோடிக்கணக்கான ஆண்டு படிநிலை மாற்றத்தின் விளைவாக நீரிலும் நிலத்திலும் வாழ வல்லமையுள்ள தவளையினம் உருவாயிற்று. தவளையினத்திலிருந்து பாம்பு பல்லி போன்ற ஊர்வன இனம் (Reptiles) தோன்றிற்று. கோடிக்கணக்கான ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்த டைனோசார் விலங்குகள் இந்த ஊர்வன வகையைச் சேர்ந்தவையே! இன்னும் கோடி கோடி ஆண்டுகள் உயிர் வேதியியல் படிநிலை மாற்றங்களின் காரணமாகப் பாலூட்டி இனமும் பறவையினமும் ஊர்வன இனத்திலிருந்து உருவானது. பாலூட்டிகளின் படிநிலை மாற்றத்தின் ஒரு நிலையில் குரங்கு இனம் உண்டானது. அந்தக் குரங்கு இனத்திலிருந்து படிநில மாற்றம் அடைந்து இன்றைக்குச் சுமார் 20 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பாக மனித இனம் உண்டானது. இவையெல்லாம் ஊடகமான செய்திகள் அல்ல. உடற்கூறியல், உடலியக்கவியல், உயிர்வேதியியல், இரத்த வகை ஒற்றுமை, மரபணுவியல், தடவியல் மற்றும் புதை பொருள் ஆராய்ச்சி, கதிரியக்கவியல் போன்ற பல்வேறு அறிவியல்கள் வழி கண்டறிந்த உண்மைகள்.

### போலியான மதம் தோன்றிய வரலாறு

ஆக 475 கோடி ஆண்டு வரலாற்றுக்குச் சொந்தமான உலகில் மனிதனின் வரலாறு வெறும் 20 இலட்சம் ஆண்டுகளே! இந்த 20 இலட்ச மனித வரலாற்றில் 4500 ஆண்டுகளுக்கு முன்பு வரை மனித இனத்துக்கு மதம் கிடையாது! இன்றைக்கு மனித இனத்தை மத அடிப்பையில் பிளவுபடுத்தி உலக அமைதியைக் கெடுத்து உலக அழிவுக்குக் காரணமாக நம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற அனைத்து மதங்களும் 4500 ஆண்டுகளுக்குள் சில தன்னலக் கும்பல்களால் மக்களின் அச்சம் அறியாமை போன்ற பலவீனங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டவையே! இடி, மின்னல், நிலச்சரிவு, வெள்ளம், எரிமலை, நிலஅதிர்வு, காட்டுத் தீ, ஆழிப் பேரலை போன்ற இயற்கைச் சீற்றங்களுக்கான அறிவியல் உண்மைகளை அறிந்திராது அச்சத்தால் நடுங்கியிருந்த மனித குலத்தை உண்மைகளுக்குப் புறம்பான காரணங்களை அவைகளுக்குக் கற்பித்து பொய்யான மதங்களை உருவாக்கி அடிமைப்படுத்தியது அந்தத் தன்னலக் கூட்டம். அறிவோடு எதிர்த்துப் பேசிய பகுத்தறிவுவாதிகள் அழிக்கப்பட்டனர்.

ஏன், எதற்கு எப்படி? என்று எதையுமே ஆராய்ச்சி செய்து பார் என்று ஏதென்சு நகரத்து இளைஞர்களின் சிந்தனையைத் தூண்டிய அறிஞர் சாக்ரடீசு நஞ்சு கொடுக்கப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார். பகுத்தறிவு பேசிய இத்தாலி நாட்டைச் சேர்ந்த புரூனோ என்ற பகுத்தறிவாதி 16.2.1600 இல் ரோமன் சர்ச்சில் வைத்து உயிரோடு எரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட வரலாற்றையும் நாம் மறந்து விடுவதற்கில்லை! போலியான மதக் கருத்துகளை யாரும் எதிர்க்கத் துணியவில்லை! துணிந்த ஒரு சிலரோ மக்கள் கூட்டத்தின் முன்பாக எரிக்கப்பட்டனர்.! கல்லால் அடித்துக் கொல்லப்பட்டனர்! தூக்கிலிடப்பட்டனர்! கை கால்கள் துண்டிக்கப்பட்டனர்! இத்தகைய கொடுமையான தண்டனைகளை நேரில் கண்டபின் யாருக்கு போலி மதக் கருத்துகளை எதிர்க்கத் துணிவுண்டாயிருக்கும்? இவ்வாறு அறிவியல் உண்மைகளுக்குப் புறம்பான கருத்துகளை தங்கள் மத நூல்களில் கொண்டுள்ள அனைத்து மதங்களும் மக்களின் அறியாமை அச்சம், மூடநம்பிக்கை போன்றவைகளை அடித்தளமாகக் கொண்டு அழகாகவும், உறுதியாகவும் மனித சமுதாயத்தில் நிலைநிறுத்தப்பட்டன. உலகில் உள்ள அத்தனை மத நூலகளிலும் அறிவியல் உண்மைகளுக்குப் புறம்பான

செய்திகள்தான் பிரபஞ்சத்தைப் பற்றி, அதன் தோற்றத்தைப் பற்றி, மனித குலம் உருவான வரலாற்றைப் பற்றிக் காண முடிகின்றது. தெய்வீகமானதென்றும், புனித மானதென்றும், மத நம்பிக்கையாளர்களால் போற்றப்படு கின்ற அனைத்து மத நூல்களும் பொய் மூட்டைகள் எனும்போது அவை கூறும் கருத்துகளும் அவை காட்டும் சொர்க்கம், நரகம் போன்றவையும் எவ்வளவு போலியானவை என்பது நான் கூறாமலேயே உங்களுக்கு விளங்கும். எனவேதான் தெளிவாக உறுதியாக ஒரு கருத்தை வலியுறுத்த விரும்புகின்றேன். இன்றைய மனித குலத்துக்குத் தேவை மத நல்லிணக்கமல்ல! மாறாக மதமற்ற ஒரு நிலை! உண்மைக்குப் புறம்பான போலிக் கருத்தோடு உடன்பாடும் தேவையில்லை! இணக்கமும் தேவையில்லை! மதங்களற்ற மனித சமுதாயமே இன்றைய மானுட அமைதி வாழ்விற்கு மகத்தான் தேவை!

## சாதிகள் தோன்றிய வரலாறு

உலகில் எந்த மதத்திற்கும் இல்லாத ஒரு தனிச் சிறப்பு இந்து மதத்திற்கு உண்டு! அதுதான் சாதீயத்தை இந்து மதமும் அதன் கடவுள்களும் அங்கீகரிக்கின்ற அருவருக்கத்தக்க செயல்! இந்து மதத்தின் ரிக் வேதம் தொடங்கி, மகாபாரதம், இராமாயணம் போன்ற அதிகாசங்களிலும் பகவானால் அருளப்பட்டதாகக் கதைக்கப்படும் பகவத் கீதையிலும் மனித குலத்தை இழிவு படுத்தும் சாதீயம் வலியுறுத்தப்பட்டு நியாயப்படுத்தப்படு கின்றது! இந்து மதத்தின் முதன்முதல் வேதமாகிய ரிக்வேதத்திலேயே பிரம்மாவின் நெற்றியில் பிறந்தவர்கள் சமுதாயப் படிக்கட்டில் மிக உயர்ந்த சமூகமாக வும், அடுத்து தோளில்,தொடையில் மற்றும் பாதத்தில் பிறந்தவர்கள் அடுத்தடுத்து தாழ்ந்த சமூகங்களாகவும் திட்டமிட்டு எழுதப்பட்டுள்ளது! இந்தியாவில் ஆயிரக் கணக்கான சாதிகள் உருவாகி மனிதகுல ஒற்றுமைக்கு எதிரான சாதிச் சண்டைகளும் கலவரங்களும் உருவாகக் கருவான இந்த மனிதகுல விரோதக் கருத்தை பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணன் பகர்கிறாராம்!

**பகவத் கீதை அத்தியாயம் 4 – பாடல் 13 இவ்வாறு கூறுகிறது:**

“மனிதர்களின் நான்கு வர்ணங்களையும் குணத்தின் மற்றும் செயல்பாடுகளின் அடிப்படையில் நான்தான் படைத்தேன். படைத்த என்னாலேயே இந்த அமைப்பை மாற்ற முடியாது.”

கடவுள் மனித குலத்தின் நான்கு பிரிவுகளையும் குணத்தின் மற்றும் செயல்பாடுகளின் அடிப்படையில்தான், தான் படைத்ததாக வாக்குமூலம்

தருவதோடு படைத்த தன்னால்கூட இந்த அமைப்பை மாற்ற முடியாது என்று ஆணித்தரமாக அடித்துக் கூறினால் மனித குலத்தின் ரீதியிலான பிரிவுகளை எவ்வளவு ஆழமாக இந்துமதம் வலியுறுத்துகின்றது என்பதை மனிதநேயச் சிந்தனையாளர்களின் முடிவுக்கே விட்டு விடுகின்றோம். 20 இலட்ச ஆண்டுகள் மனித வரலாற்றிலே எந்த நாட்டிலும் சாதிகள் தோன்றவில்லை. இந்தியாவில் மட்டும் ஒரு தன்னல சக்திகளால் 3000–4000 ஆண்டுகளுக்கு முன்பாக வேதங்கள் கற்பிக்கப்பட்டு அதன் அடிப்படையில் செயற்கையாகத் திணிக்கப்பட்டதுதான் சாதி எனும் சமதாய நோய்! நம் தமிழகத்தை எடுத்துக் கொண்டோமேயானால் 2000 ஆண்டுகள் முன்பு வரை சாதிகள் கிடையாது. ஒரே இனமாக வாழ்ந்து வந்த நம் தமிழகத்தில், வடநாட்டு பார்ப்பன உயர்சாதியினர் புகுந்து, நம் மன்னர்களைப் புரியாத மொழி (சமஸ்கிருதம்) மூலம் ஏமாற்றி, தம்மை ஆட்சி ஆலோசகர் களாக நியமிக்கச் செய்து, அவர்களின் நச்சுக் கருத்துகளின்படி நம் மன்னர்களை ஆட்சி நடத்தச் செய்தார்கள்; அன்று முதல் பற்றிக் கொண்டு வேகமாகப் பரவி இந்தச் சமுதாயத்தைச் சீரழித்து வருவதுதான் இந்த சாதீய நோய்!

## ‘குரு’க்களை நோக்கி ஓடுவது ஏன்?

*“வாழ்க்கை முறையில் வேகமான மாற்றங்கள் உருவாகி வருகின்றன. பழைய மூடநம்பிக்கைகள் நெருக்கடிக்கு உள்ளாகின்றன. இந்தச் சூழலில் தங்களால் ஏற்கெனவே நம்பப்பட்டு வந்த நம்பிக்கைகள் வாழ்க்கை குறித்த மதிப்பீடுகள் மாறிப் போய் விடுமோ என்ற அச்ச உணர்வுக்கு உந்தப்பட்டு, அதை பாதுகாத்துக் கொள்ள விரும்புகிறார்கள்.*

*ஒரு காலத்தில் ‘கடவுள்’, ‘மாந்திரீகம்’, ‘பிரார்த்தனை’ என்று நம்பிக் கொண்டிருந்தவர்கள், புதிய சூழலில் ‘ஆன்மீகக் குரு’க்களை தேடிப் போகிறார்கள். இந்த ‘குரு’க்கள் கூறுவதுபோல் தங்களின் வாழ்க்கையின் எதிர்காலம் அமையும் என்று நம்புகிறார்கள்.*

*இன்னும் சிலர், தங்களின் பழைய நம்பிக்கைகளை வேகவேகமாக புதுப்பித்து பாதுகாத்துக் கொள்ள துடிக்கிறார்கள். அதற்காக பழமைச் சிந்தனைகளுக்கு போலி அறிவியலைப் பயன்படுத்தி விளக்கம் கூறத் தொடங்கிவிட்டனர். படித்தவர்களாக வளர்ச்சியுற்ற சமூகத்தினராக இருந்தாலும் படிக்காத கிராமத்து மக்களாக இருந்தாலும் விஞ்ஞானத்தைப் பற்றிய பொதுவான புரிதல்கூட அவர்களிடம் இல்லை.*

**– கேரள பகுத்தறிவாளர் சேனல் எடமருகு**
**‘பிரன்ட் லைன்’ ஏட்டுக்கு (அக்.4, 2013) அளித்த பேட்டி**

# முகத்திரை கிழிந்த சில சாமியார்களின் கதை

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி அருகே குட்லாடம்பட்டி தாடகை நாச்சி அருவி பக்கத்தில் இரமணகிரி மடம் உள்ளது. அதில் அருகிலுள்ள ஜெகநாதபுரத்தைச் சேர்ந்த முனீஸ்வரியின் மகன் ஆனந்த சுவாமி (22) சாமியாராக இருக்கிறார். மழை வேண்டியும் மக்கள் நலனுக்காகவும் இந்த சாமியார் வெள்ளிக்கிழமை (சூன் 11, 2004) இரவு 8 மணிக்கு 7 அடி ஆழத்தில் மூடிய குழிக்குள் தவம் இருக்கத் தொடங்கினார். ஞாயிறு காலை சரியாக 8 மணிக்கு வெளியில் வந்து பக்தர்களுக்கு ஆசி வழங்குவார் என அவரது சீடர்கள் அறிவித்தார்கள். இதைக் காணப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி இருந்தார்கள்.

இந்தச் சாமியார் இதற்கு முன்னர் குழிதோண்டி குழிக்குள் ஒரு நாள் தவம் இருந்து உயிரோடு வெற்றிகரமாக வெளியே வந்து தனது ‘சக்தி’யை பக்தர்களுக்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

முதலில் நிலத்துக்குள் குழி தோண்டி அதற்குன் முன்கூட்டியே சுவாமி சிலைகள், படங்கள், பூசைப் பொருள்கள், பழங்கள், தண்ணீர் முதலியன வைக்கப்படும்.

அதன் பிறகு ஆனந்த சுவாமி காவி உடையில் தவக் கோலத்துடன் குழிக்குள் இறங்கியதும் குழியின் மேற் பகுதியை சாமியாரின் சீடர்கள் மூடி விடுவார்கள்.

சாமியார் குழிக்குள் இறங்கிய பிறகு மேற்பகுதியை எந்த மாதிரி மூட வேண்டும் என்று சீடர்களுக்கு யோசனை சொல்லப்படும். அம்மாதிரி மூடும்பொழுது குழிக்குள் காற்றுப் புகுவதற்கு ஏற்றவாறு மூடப்பட வேண்டும் என்பது நியதி. சீடர்களைத் தவிர வேறு பொது மக்கள் யாரும் குழியை மூடுவதற்கு அனுமதிப்பது கிடையாது. ஏனென்றால் பக்தர்கள் குழிக்குள் காற்று நுழைய முடியாதபடி மூடி விடுவார்கள் என்ற பயமேயாகும். குழி மேல் வராதபடி உள்ளே சுவாமி இருக்கிறார், கால்படக் கூடாது எனப் பக்தர்கள் பயமுறுத்தி விடுவார்கள்.

அப்படித்தான் ஆனந்த சுவாமி தவக் கோலத்தில் குழிக்குள் இறங்கியதும் அவரது சீடர்கள் குழியை மூடினார்கள். வழக்கமாக இந்தச் சாமியார் குழிக்குள் தவம் இருக்கும்பொழுது சுற்றிலும் சுவர் கட்டுவது இல்லை. ஆனால், இம்முறை தவம் இருந்தபொழுது சுற்றிலும் செங்கல் வைத்துச் சுவர் எழுப்பி விட்டனர்.

சீடர்கள் முறைப்படி மூடி, குழிக்குள் காற்று புகுவதற்கு ஏற்றபடி செய்து விட்டுப் போய்விட்டனர். ஆனால், அதற்குப் பிறகு அங்கு வந்த பக்தர்கள் குழிமேல் மண்ணை போட்டுப் பலமாக மூடி விட்டனர். இதனால் காற்று குழிக்குள் புக முடியாதவாறு தடைபட்டுவிட்டது. இதனால் குழிக்குள் தவமிருந்த சாமியார் மூச்சுத் திணறிய நிலையில் மூடியைத் தள்ளிவிட்டு வெளியேற முயற்சித்தார். அப்பொழுது குழியின் மேல் போடப்பட்டு இருந்த பலகை சற்று அசைந்தது. ஆனால், மண் பலமாகப் போட்டு மூடப்பட்டு இருந்ததால் பலகை முற்றாக அசைந்து கொடுக்கவில்லை.

சாமியார் தவக் கோலத்தில் குழிக்குள்ளே இறங்கும் பொழுது சுற்றிலும் தீ மூட்டம் போடும்படியும் கூறி இருந்தார். பலகை அசைந்ததும் சாமியார் தீ மூட்டத்தான் சொல்கிறார் என்று நினைத்துச் சுற்றிலும் நின்ற பக்தர்கள் தீயை மூட்டி விட்டனர். தீயில் இருந்து வெளியான வெப்பம் குழிக்குள் புகுந்து சாமியாரைத் திணறடித்திருக்க வேண்டும்.

ஞாயிற்றுக்கிழமை காலை ஆனந்த சுவாமி தவக் குழியில் இருந்து வெளிவரும் காட்சியைப் பார்க்கப் பல்லாயிரக்கணக்கான பக்தர்களும்

சுவாமியின் தாய் தந்தையரும் கூடிவிட்டனர். ஆனால், நேரம் ஆகியும் சாமியார் வெளிவரவில்லை.

பக்தர்களுக்கு அய்யம் ஏற்பட்டது. இருப்பினும் சீடர்கள் சுவாமி சிறிது நேரத்தில் வெளியே வந்து விடுவார் என்று கூறிக் கொண்டே காலம் கடத்தியதைப் பக்தர்கள் நம்பிக் காத்திருந்தனர். பின்னர் குழியில் இருந்து கெட்ட நாற்றம் வருவதை அறிந்த சீடர்கள் கலக்கம் அடைந்தனர்.

இந்த நிலையில் குழியின் மேல் மூடப்பட்டிருந்த பலகையைப் பிரித்துப் பார்த்தபொழுது, ஆனந்தசுவாமி கவிழ்ந்த நிலையில் குப்புறப் பிணமாகக் கிடந்தார். அவர் முகத்தில் காயங்கள் இருந்தன.

அவர் பிணமாகி இரண்டு நாட்கள் இருக்கும் என்றும் அதனால்தான் அவரது உடல் அழுகிவிட்டதென சவ பரிசோதனை செய்த மருத்துவர்கள் தெரிவித்தார்கள்.

குழிக்குள் காற்றுப் புகமுடியாது போகவே சாமியார் இறங்கிய 4 அல்லது 5 மணி நேரத்தில் ‘‘பரலோகம்’’ போய்விட்டார்! (‘தினகரன்’ சூன் 15, 2004)

மேலும் இரண்டு செய்திகள்:

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி அருகேயுள்ள பூவலம்பேடு ஊரில் அமாவாசை நாளன்று (சூன் 16, 2004) ஊரில் கடவுள் குற்றம் நிகழ்ந்துவிட்டதாகவும், வரும் அமாவாசை நாளன்று ஊரைச் சேர்ந்த ஒரு குழந்தையும் அதன் தாயும் மரணமடைவார்கள் என்றும் அந்த ஊரில் ‘அருள்’ வாக்குச் சொல்லும் பெண்மணி கூறியுள்ளார்.

இதைக் கேட்ட மக்கள் அனைவரும் தங்களது வீடுவாசல்களைப் பூட்டிவிட்டு அக்கம் பக்கம் உள்ள ஊர்களில் உள்ள உறவினர்கள் வீடுகளில் தஞ்சம் புகுந்தார்கள். மாணவர்கள் யாரும் பள்ளிக்கு வராததால் ஊர்ப் பள்ளிக்கூடமும் மூடப்பட்டுவிட்டது. ஊரும் வெறிச் சோடிக் கிடந்தது. ஏறத்தாழ 2000 பேர் வசிக்கும் அந்த ஊரில் கடந்த 6 மாதத்தில் 16 பேர் பல்வேறு நோய்கள் தாக்கிப் பலியாகியுள்ளனர். அமாவாசை முடிந்த பின்னர்தான் மக்கள் ஊருக்குத் திரும்புவார்கள் என்று தெரிகிறது!

‘அருள்வாக்கு’ சக்தியை நம்பியதால் ஏற்பட்ட மோசமான விளைவு இது!

கிருஷ்ணா பிரபல தெலுங்கு நடிகர், மறைந்த முன்னாள் முதல்வர் என்.டி.ஆர். அவர்களின் மகன். சூன் 8 ஆம் நாள் தனது வீட்டுக்கு வந்த படத் தயாரிப்பாளர் சுரேஷ், சோதிடர் சத்திய நாராயணா இருவரோடும் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டார். பின்னர் வாய்த் தர்க்கம் கைகலப்பாக மாறியபொழுது கிருஷ்ணா அவர்களைத் துப்பாக்கியால் சுட்டார். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய இருவரும் மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

சோதிடர் சத்தியநாராயணா சுடப்பட்டதற்குக் காரணம், ‘‘உமது சாதகத்தின் பிரகாரம் இனி உமக்குச் சினிமாத் துறையில் இறங்குமுகம்தான்’’ என்று அவர் பலன் கூறியதுதான். பாவம் சோதிடர், தனக்குக் கண்டம் இருப்பதை முன்கூட்டியே அறிந்து கொள்ள அவருக்குத் தெரியாமல் போய்விட்டது. எல்லோருக்கும் சொல்கிற பல்லி, தான் மட்டும் கழு நீர் பானைக்குள் விழுந்த கதைதான்.

சோதிடர்கள், மனித கடவுளர்கள், மாந்திரிகர்கள், அருள்வாக்குச் சொல்வோர் ஆகியோரது கணிப்புகள் பலிக்கிறதோ இல்லையோ எப்படியாவது எதிர்காலத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற தீராத ஆசையில் மக்கள் அவர்களது வீட்டுக் கதவைத் தொடர்ந்து தட்டிக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால், இப்பொழுது சோதிடத்தின் கதவே பலமாகத் தட்டப்படுகிறது.

அவ்வளவு மூடநம்பிக்கை!

**– ‘நக்கீரன்’ எழுதி, கழகம் வெளியிட்ட**
**‘சோதிடப் புரட்டு’ நூலிலிருந்து**

இதேபோல் தனது ஆன்மீக சக்தியால் ஒரு குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் மழை பெய்யச் செய்ய முடியும் என்று சவால் விட்டார் ஒரு சாமியார். ஆனால் மழை பெய்யவில்லை. சேலம் ஓட்டல் ஒன்றில் வாங்கியிருந்த சாமியாரை பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் முற்றுகையிட்டு மோசடியை அம்பல மாக்கினர். சாமியார் ஓட்டலின் பின்புற வழியாக தப்பி ஓடினார்.

## 'பால்ய விவாகம்': அன்றும் இன்றும்!

பார்ப்பனியம் சமூகத்தில் திணித்த பல கொடுமைகளில் 'பால்ய விவாகம்' என்ற குழந்தைத் திருமணமும் ஒன்று. 5 வயது, 6 வயதிலேயே திருமணம் செய்யும் கொடுமை பார்ப்பனர்களால் திணிக்கப்பட்டது. பார்ப்பனக் குடும்பங்களில் இது அதிகம் நடந்தது. இதனால் பெண் குழந்தைகள் மரணமும் இளம் விதவைகள் எண்ணிக்கையும் அதிகரித்தது. "பெற்றோர்களும் தாங்களாகவே முன் வந்து திருமண வயதை உயர்த்த உறுதி ஏற்கவேண்டும்" என்று, பூனா பார்ப்பனரும், 'சீர்திருத்தவாதி'யுமான ராணடே வேண்டுகோள் விடுத்தார். இந்து தர்ம சாஸ்திரங்களில் அதற்கு இடமில்லை என்று சங்கராச்சாரிகளும் வைதீகப் பார்ப்பனர்களும் மறுத்து விட்டனர். திருமண வயதை உயர்த்தி சட்டம் போடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று பிரிட்டிஷ் ஆட்சி முயற்சித்தபோது சுதந்திரப் போராட்ட வீரராக சித்தரிக்கப்பட்ட மராட்டிய பார்ப்பனர் திலகர் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

"நமது சமூகப் பழக்க வழக்கங்கள் மற்றும் வாழ்க்கை முறைகளை ஒழுங்குபடுத்தும் வேலையில்

அரசாங்கம் இறங்குவதை நாங்கள் விரும்பவில்லை'' என்று தான் நடத்தி வந்த 'மராட்டா' பத்திரிகையில் எழுதினார்.

அப்போது குஜராத்தைச் சார்ந்த கவிஞரும் சீர்திருத்தவாதியுமான பி.எம். மலபாரி என்ற பார்சிக்காரர் வைஸ்ராய் ரிப்பன் பிரபுவிடம் இந்த பால்ய விவாகம், விதவைக் கொடுமைகள் பற்றிய ஒரு விரிவான அறிக்கையை 1884இல் சமர்ப்பித்தார். அந்த அறிக்கையை பிரிட்டிஷ் ஆட்சி பல்வேறு பிரமுகர்களுக்கு அனுப்பி கருத்து கேட்டது.

அப்போது மராட்டிய சமூகநீதிப் புரட்சியாளர் ஜோதிபாபுலே பால்ய விவாகத்துக்கு தடைபோட வேண்டும் என்று உறுதியாகக் கூறினார். கவிஞர் மலபாரி, இங்கிலாந்துக்கே சென்று இந்தச் சட்டத்துக்கு ஆதரவு திரட்ட முயன்றபோது, திலகருக்கு கோபம் வந்துவிட்டது. ''இவர் ஒரு பார்சிக்காரர். இவர் எப்படி இந்து மதப் பிரச்சினைகளில் தலையிடலாம்?'' என்று தனது 'கேசரி'ப் பத்திரிகையில் எழுதினார். கடும் எதிர்ப்புகளுக்கிடையே பெண்களின் திருமண வயதை 10லிருந்து 12ஆக உயர்த்தி ஒரு மசோதா வந்தது. 12 வயதுக்குட்பட்ட பெண்களிடம் உடலுறவு கொள்வது சட்டப்படி குற்றமாக்கப்பட்டது. 1909லிருந்து பெண்களுக்கான குறைந்தபட்ச திருமண வயதை 16ஆக உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுத்து வந்தாலும் – பார்ப்பன எதிர்ப்புக்கு பிரிட்டிஷ் ஆட்சி பயந்துபோய் ஒதுங்கியே நின்றது; 20 ஆண்டுகளுக்குப் பிறகு 1929இல்தான் பெண்களுக்கான திருமண வயதை 14 ஆக நிர்ணயிக்கும் 'சாரதா சட்டம்' வந்தது. 'சுதந்திர' இந்தியாவில் பெண்களின் திருமண வயது 18ஆக உயர்த்தப்பட்டது. 'பால்ய விவாகத்தை' சமூகத்தில் திணித்த பார்ப்பனர்கள், இப்போது அதை கைகழுவி விட்டார்கள். ஆனால், பார்ப்பனரல்லாத ஒடுக்கப்பட்ட ஜாதியிரிடையேயும் பழங்குடி மக்களிடையேயும் இந்த சமூகக் கொடுமை நீடிக்கிறது.

தமிழ்நாட்டில் தருமபுரி, கிருஷ்ணகிரி, தேனி, ஈரோடு மாவட்ட மலைப் பகுதிகளில் குழந்தைத் திருமணங்கள் நடக்கின்றன. கோவை, திண்டுக்கல், மதுரை உள்ளிட்ட 12 மாவட்டங்களில் கடநத 6 ஆண்டுகளில் சராசரியாக 20 சதவீத குழந்தைத் திருமணங்கள் நடக்கின்றன. தங்களது பெண் குழந்தைகளின் உடல்நலன், எதிர்கால வாழ்க்கைக் குறித்து கவலைப்படாத அளவுக்கு அவர்களின் பழமைவாத சிந்தனைகள் தடுக்கின்றன.

கல்வி அறிவு இல்லாததும் பாதுகாப்பு இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சமும் அவர்களை இந்த சிந்தனைக்கு தூண்டுகின்றன. இது குறித்து ஆய்வு செய்த 'யுனிசெஃப்' நிறுவனம் இவ்வாறு கூறுகிறது. மக்கள் தொகை இந்தியாவில் ஆண்டுக்கு 8 சதவீதம் உயருகிறது. ஆனால் குழந்தைத் திருமணங்கள் ஒரு சதவீதம்தான் குறைகிறது. 2020ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் 2 கோடியே 30 இலட்சம் குழந்தைத் திருமணங்கள் நடக்கும்'' என்கிறது அந்த ஆய்வு. தமிழ்நாட்டிலேயே இந்த நிலை நீடிப்பதுதான் கவலைக்குரியதாகும்.

குழந்தைத் திருமணங்களை அதிகாரிகள் தடுத்து நிறுத்தும் செய்திகள் வருகின்றன. அதைவிட முக்கியம் இந்த மக்களிடம் இது குறித்த சமுதாய விழிப்புணர்வையும் அறிவியல் சிந்தனையையும் உருவாக்குவது தான்!

பார்ப்பனியம் திணித்த கொடுமையை இப்போது பார்ப்பனரல்லாத ஒடுக்கப்பட்ட சமூகம் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருப்பது தான் மிகப் பெரும் அவலம்!

## 'ஆவி'யை படம்பிடிக்க முடியுமா?

``ஆவிகளை படம் பிடிக்க முடியும்'' என்று மந்திவாதிகள் கூறுவது உண்மைதானா என்பதைக் கண்டறிய ஒரு குழுவொன்று அமைக்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை 'டெய்லி மெயில்' (னுயடைல ஆயடை) என்ற பத்திரிகை செய்தது. ஆவிகளை அடையாளம் காண மூன்று ஆன்மீகவாதிகளையும் அவற்றைப் படம் எடுக்க மூன்று புகழ்பெற்ற புகைப்பட நிபுணர்களையும் அது நியமித்து ஆவிகளைப் படமெடுக்கக் கூறியது. ஆவிகளை உணர்ந்து படம் எடுப்பதற்கு அதற்கான மனோ பக்குவம். உளநிலையும் புகைப்பட நிபுணர் களுக்கு இல்லை என்று மூன்று ஆன்மீகவாதிகளும் புகைப்பட நிபுணர்கள் மீது குற்றம்சாட்டினர். அதனால் அதில் வெற்றி பெற முடியாது என்று அந்த ஆன்மீகவாதிகள் கூறினர்.

தங்கள் முன் ஆவிகள் என்று கூறக்கூடிய எந்த வகையான நிரூபணங்களையும் ஆன்மீகவாதிகள் காட்டவில்லை. எனவே அவர்கள் கூறும், 'ஆவி படம்' சாத்தியமானதல்ல என்று புகைப்பட நிபுணர்கள் பதில் கூறினர். ஆவிகளின் படங்கள் என்று அந்த ஆன்மீகவாதிகள் கூறிய படங்களை வரவழைத்து அந்தப் படங்களை மூன்று புகைப்பட நிபுணர்களும் நுணுக்கமாக ஆராய்ந்தனர். ஆய்வில் அது ஆவியின் படங்கள் அல்ல. அதற்கான ஆதாரமும் சிறிதளவேனும் இல்லை. மக்களை ஏமாற்றும் மோசடி – ஏமாற்று வேலைகளுக்குப் பயன்படுத்த வேண்டி தாங்களாகவே தயாரித்த படங்கள் அவை என்று அந்த புகைப்பட நிபுணர்கள் அறிவித்தனர்.

**தகவல்: 'டைம்ஸ் ஆப் இந்தியா' 1909 ஜூன் 25**

## 'குகை'க்கால மனிதன் நம்பியதே 'பேய்'!

"பேய் இருக்கா, இல்லையா?" "நம்பலாமா? நம்பப்படாதா?" என்று ரஜினியையே கலவரப்படுத்தும் கேள்வியை வடிவேலு கேட்கும் காட்சி பிரபலமானது. நம்மில் சிலரும் இந்தக் கேள்வியுடன் அருகில் இருப்பவர்களைப் பதற வைத்துக் கொண்டுதான் இருக்கிறோம். அதே சமயம், கொடூர முகப் பேய், வெள்ளுடை தரித்த ஆவிகளைத் திரைப்படங்களில் கண்டு பயந்து மகிழ்வதிலும் பலருக்கு ஆர்வம் அதிகம்.

தமிழில் அதீத ஒப்பனையுடன் நடிகர், நடிகைகள் 'ரொமான்டிக் லுக்' விடும் காதல் படங்களைத் தவிர்த்துவிட்டு, பேய்ப்படம் என்று அறிவிக்கப்பட்ட படங்களைக் கணக்கிட்டாலே ஒரு நூறை நெருங்கும். 'யார்', 'மை டியர் லிஸா', 'ஜென்ம நட்சத்திரம்', '13–ம் நம்பர் வீடு', 'வா அருகில் வா' போன்ற படங்கள் பேய்களைப் பிரபலமாக்கியவை. சமீபத்தில், 'யாவரும் நலம்', 'பீட்சா' போன்ற படங்களும் சிறப்பாக எடுக்கப்பட்டவை. மிகச் சமீபமாக 'யாமிருக்க பயமே' என்ற திரைப்படம் பேயுடன் நகைச்சுவை கலந்த கதையைக் கொண்டு எதிர்பாராத வேகத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது. படத்தின் வெற்றியை நாயகன் கிருஷ்ணாவே நம்பியிருக்க மாட்டார்!

என்றாலும், அறிவியல்பூர்வமாக எந்த அடிப்படையும் இல்லாத ஒரு விஷயத்தைப் பற்றிய கதைகள், திரைப்படங்கள் மக்களைக் கவர்வது ஏன்? பேயின் இருப்புப் பற்றிய சந்தேகம் இருந்தாலும் மனதில் கிலியுடன், பாதுகாப்பான வளையத்துக்குள் அமர்ந்து பேய்ப் படங்களைப் பார்க்கும் ரசிகர்களால் அந்த பய உணர்வை ரசிக்க முடிகிறது என்று உளவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தான் எழுதிய 'காஞ்சனை' கதை குறித்த கேள்விக்கு "பேயும் பிசாசும் இல்லை என்றுதான் நம்புகிறேன். ஆனால், பயமாக இருக்கிறதே!" என்று புதுமைப்பித்தன் பதிலளித்திருக்கிறார். "நம் நினைவுகள்தான் பேய்கள்" என்று மர்மக் கதை மன்னனான ஸ்டீஃபன் கிங் குறிப்பிட்டிருக்கிறார். அவரது கதைகளை அடிப்படையாக வைத்துப் பல 'திகில்' திரைப்படங்கள் வெளியாகியுள்ளன.

ஆதி மனிதர்களாகக் குகைகளில் நாம் வாழ்ந்துவந்த காலகட்டத்தில்தான் நம்மிடையே பேய் பற்றிய பயம் வந்தது. ஒருவேளை, பேய் நம்பிக்கைதான் கடவுள் நம்பிக்கைத் தோன்றுவதற்கும் காரணமோ? விவசாயம், அறிவியல், கல்வி போன்ற விஷயங்கள் அறிமுகமாகாத அந்தக் காலகட்டத்தில், புதிரான சம்பவங்கள் நடந்தால் அதற்கு ஏதேனும் ஒரு 'சக்தி'தான் காரணம் என்று குகை மனிதர்கள் அஞ்சினர். உதாரணமாக, குகைக்கு வெளியே கற்கள் உருண்டோடினால்கூட, கண்ணுக்குப் புலப்படாத சக்திதான் அதற்குக் காரணம் என்று குகை மனிதர்கள் நம்பியிருக்கிறார்கள். இந்த பயம் நம் மனதின் எங்கோ ஓர் மூலையில் படிந்து வந்திருக்கிறது. அது இன்றும் அவ்வப்போது எட்டிப் பார்க்கிறது.

கல்வியும் அனுபவமும் இந்த நம்பிக்கைகள் மீதான கேள்வியை நம்முன் எழுப்பியுள்ளதால், இந்த விஷயங்களைக் கதைகளில் மட்டும் ரசிக்கும் அளவுக்கு நம் மனம் பக்குவப்பட்டிருக்கிறது. காட்டில் அமர்ந்து தவம் புரிந்த இரவுகளில், உடனடியாக விளக்க முடியாத ஒலிகள், அசைவுகளால் அச்சமுற்றதாக புத்தரே குறிப்பிடுகிறார். அறிவுபூர்வமாக அவற்றை அணுகிய புத்தர், தன் பயத்துக்கு எந்த ஆதாரமும் இல்லை என்று உணர்ந்தார். எனினும், கலைகளில் அறிவையும் தாண்டி கற்பனைகளே அதிகப் பங்கை வகிக்கின்றன. எனவே, பேய், டிராகுலா, ஓநாய் மனிதன் உள்ளிட்ட நிரூபணமாகாத விஷயங்கள் குறித்த கலைப் படைப்புகள் இன்றும் வெற்றி பெறுகின்றன. 'யாமிருக்க பயமே' அவற்றில் ஒன்று.

**'தமிழ் இந்து' நாளேடு**

பகுத்தறிவுப் பரப்புரையாளர்களுக்கு பாதுகாப்புச் சட்டம் தேவை – நீதிபதி சந்துரு.

*மூடநம்பிக்கைகளைப் பரப்புவதற்கு நீதிமன்றங் களே துணை போவதை சுட்டிக்காட்டியுள்ள உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி எஸ். சந்துரு, பகுத்தறிவுப் பரப்புரை செய்வோரை பாதுகாக்க சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.*

மராட்டிய மாநிலத்தில் மூடநம்பிக்கைகளுக்கு எதிராக இயக்கம் நடத்திய தபோல்கரின் படுகொலை அறிவியல் பூர்வமாக சிந்திப்பவர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. நாடெங்கும் மூடர் கூடங்கள் உருவாவதை தடுக்க சட்டங்கள் வேண்டும் என்ற குரல்கள் அதிகரித்துள்ளன. மராட்டியத்தில் மூட நம்பிக்கைகளை எதிர்த்து பிரச்சாரம் செய்வோரை பாதுகாக்க புதிய சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

மூடநம்பிக்கைகளுக்கு எதிராக பிரச்சாரம் செய்பவர்களை அரசே தண்டித்த வரலாறுகளும் உண்டு. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இங்கிலாந் தில் மக்கள் பெருக்கத்துக்கு எதிராக குடும்பக் கட்டுப்பாட்டை அன்னிபெசன்ட் அம்மையார் வலியுறுத்தினார். அவர் கிறிஸ்துவ மதத்துக்கு எதிராக செயல்படுவதாகக் கூறி சிறையில் அடைத்தனர்.

1925 இல் டார்வினின் பரிணாம வளர்ச்சி விதி பற்றிப் பாடம் நடத்திய அறிவியல் ஆசிரியர் ஸ்கோப்ஸ், மதத்துக்கு எதிராக செயல்பட்டதாக நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டார். இன்றும் சில அமெரிக்க மாநிலங்களில் அப்படியான போதனை செய்பவர்களை தண்டிக்க சட்டங்கள் உண்டு.

இந்தியாவும் இவ்விஷயத்தில் விதிவிலக்கு அல்ல. சமீபத்தில் உத்தரகாண்ட்டில் நடந்த இயற்கைச் சீற்றத்தை கடவுளின் சீற்றமாகக் கருதி பரிகார பூஜை செய்வது பற்றி அம்மாநில அரசே பத்திரிகைகளில் முழுப்பக்க விளம்பரங்களைக் கொடுத்தது. வரம்பு மீறிய கட்டுமானங்களும் அதற்காக செய்த வன அழிப்பும்தான் வெள்ளப் பெருக்குக்குக் காரணம் என்ற உண்மை மறைக்கப்படுகிறது. அறிவியல் வளர்ச்சியின் உச்சமாகக் கருதப்படும் அணு உலைகள் திறப்பிலும் தேங்காய் உடைக்கிறார்கள்.

நீதிமன்றங்கள் இவற்றைத் தடுப்பதற்கு பதிலாக பல நேரங்களில் உறுதுணையாக இருக்கின்றன. அரசு அலுவலகங்களில் ஒரு மதத்தின் சார்பாக கடவுள் சிலைகளையும் படங்களையும் வைத்து பூஜைகள்

நடத்துவதை எதிர்த்துப் போடப்பட்ட வழக்குகள் அனேகமாக தள்ளுபடியே செய்யப்பட்டுள்ளன. நீதிமன்றக் கட்டிடங்களை கட்டும் போது பூமி பூஜையுடன் துவங்குவதும் தமிழகத்தில் பலமுறை நடந்துள்ளது.

1976 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டு மக்கள் ஆற்ற வேண்டிய அடிப்படை கடமைகள் பிரிவு 51ஏ–வில் வரையறுக்கப் பட்டுள்ளன. அதில் அறிவியல் ரீதியான விசாரணை யும் அறிவியல் மனப்போக்கும் அடிப்படைக் கடமையாக விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் நாம் கடமைகளை மறந்து மூடநம்பிக்கைகளைக் கடைப்பிடித்து வருகிறோம்.

பல்கலைக்கழக மானியக் குழு ஜோதிட படிப்பை அங்கீகரித்தபோது ஜோதிடம், விஞ்ஞானம் அல்ல என்று சிலர் வழக்குத் தொடர்ந்தனர். ஆனால், வழக்கை உச்சநீதிமன்றம் 2004 இல் தள்ளுபடி செய்துவிட்டது மூடநம்பிக்கைகளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்வோரை பாதுகாக்க சட்டம் இயற்றினால் மட்டுமே அறிவியல் பூர்வமான விசாரணைக்காக பிரச்சாரம் செய்வோருக்கு தைரியமும் அவற்றை எதிர்ப்பவர்களுக்கு அச்ச உணர்வும் ஏற்படும்.

## விண்வெளியில் பறக்கும் தட்டுகள் உருவாவது எப்படி?

*பறக்கும் தட்டுகள் (Flying Saucers) பற்றி நாம் நிறைய கேள்விப்பட்டிருக்கிறோம். வானிலிருந்து மனிதர்கள் பூமிக்கு வருவதாக புரட்டுகளை பரப்புகிறார்கள். அது மிகவும் அதிசயமானது என்றும் அதைப் பற்றி நம்ப முடியாத கட்டுக் கதைகளையும் இது வரையிலும் கூறி வந்தனர்.*

*இப்பொழுது ஆராய்ச்சியாளர்கள் குறிப்பாகக் கணித ஆராய்ச்சியாளர்கள் பறக்கும் தட்டு உருவாகும் விதத்தைக் கணிதத்தின் புதிய பிரிவான Catastrophe Theory மூலம் விளக்கியுள்ளனர். அதாவது ஒளி அலைக்கற்றையானது ஒரு நீள்வட்ட ஊடகத்தில் பாயும் பொழுது ஒரு வகையான ஒளிக்கூடு ஏற்படுகிறது. இதை காஸ்டிக் (Caustic) என்பர். அது லேசான காற்றில் ஒரு வகையான மாற்றத்தால் புதிய காஸ்டிக்காக உருவாகிறது. இது தட்டுப் போன்ற அமைப்புக் கொண்டது. பனி மூட்டத்தின் மீதோ அல்லது தூசு மண்டலத்தின் மீதோ பாயும் பொழுது இது போன்ற காஸ்டிக்குகள் உருவாகும். பனிப் படலமும் தூசு மண்டலமும் நகரும் பொழுது இந்த காஸ்டிக்குகளும் நகரும். இதையே பறக்கும் தட்டுகள் என்று கூறுகின்றனர்.*

**ஆதாரம் : V.I. Arnold, Catastrophe Theory,**

# பெண்கள் மீதான தீண்டாமை!

**பெண்களை மாதந்தோறும் தீண்டாமைக்கு உள்ளாக்கும் ஒரு நிகழ்வு இன்னும் தொடர்கிறது. பெண்களைக் கீழானவர்கள் என்ற உளவியலைக் கட்டமைக்கும் இந்தத் தீண்டாமைக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். இது குறித்து தமிழ் 'இந்து' நாளேட்டில் (ஜூலை 24) வெளி வந்த கட்டுரையி லிருந்து சில பகுதிகள்:**

நீந்த, ஓட, நடனம் ஆட, விளையாட, குத்துச் சண்டை போட, சைக்கிள் ஓட்டத் தயார் நிலையில் நிற்கும் பெண்கள். அவர்களின் உடல் உறுப்புகளிலிருந்து இரத்தம் கசிகிறது.

இப்படிப் புறச் சூழலால் உண்டான காயங் களால் இரத்தம் வழிந்தாலும் மாதவிடாய் காரணமாக உடலுக்குள்ளிருந்து இரத்தம் கசிந்தாலும் அத்தனை பெண்களும் மீண்டும் எழுகிறார்கள். தன்னைத் தானே உந்தித் தள்ளித் தடைபட்ட பயணத்தை மீண்டும் தொடர்கிறார்கள்.

'நோ பிளட் ஷுட் ஹோல்ட் அஸ் பேக்' ('No blood should hold us back'), 'டோன்ட் லெட் யுவர் பீரியட்

ஸ்டாப் யூ' (Don't let your period stop you) என்கிற வாசகங்களுடன் சானிட்டரி பேடுக்கான ஒரு பிரிட்டன் விளம்பரப் படம் கம்பீரமாக பறைசாற்றுகிறது. பெண்ணுரிமைப் பார்வையில் இந்த விளம்பரம் உருவாக்கப்பட்டுள்ளது.

பெண் தன்னுடைய கனவை, வேட்கையை, இலக்கை நோக்கித் துணிந்து வீறுநடை போட ஒருபோதும் மாதவிடாய் தடையாய் இருந்துவிட அனுமதிக்கக் கூடாது.

தீட்டு என்ற பெயரில் மாதந்தோறும் ஒருவிதத் தீண்டாமைக் கொடுமைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் பெண்கள். கோயிலுக்குள் அனுமதி மறுக்கப்படுவது தொடங்கி அவரவர் வீட்டுக்குள்ளேயே ஒதுக்கி வைக்கும் சமூகம்தான் நம்முடையது. வீட்டுக் குள்ளேயே ஒரு ஓரமாகத் தனிப் பாய், தனிப் பாத்திரங்கள் கொடுத்து அருவருப்பானவர்களாக நடத்தப்படுவதும், வீட்டுக்கு வெளியே இருட்டு அறையில் சாக்குப் பையில் உட்கார வைத்து மாதவிடாய் முடியும்வரை சாப்பாடு, தண்ணீர்கூட யாராவது கொண்டுவந்து கொடுத்துத் தனிமைப்படுத்துவதும் இன்றும் நடக்கத்தான் செய்கிறது.

மாதவிடாய் இரத்தம் தூய்மையானது என நிரூபித்துவிட்டது நவீன மருத்துவம். தொப்புள் கொடி இரத்தமும், எலும்பு மஜ்ஜையும் பரம்பரை நோயைத் தீர்க்கும் அருமருந்து. அவற்றைப் போலவே மாதவிடாய் இரத்தத்தில் உள்ள ஸ்டெம் செல்லும் உயிர்காக்கும் சக்தி கொண்டது என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள். ஆனால் என்ன சொன்னாலும் மாத விடாயின்போது பெண்ணே தன் உடலை வேண்டாவெறுப்பாகப் பார்க்கும் கற்பிதத் துக்குள்தான் இன்றும் சிக்கிக் கிடக்கிறார்கள். இதிலிருந்து விடுபட, 'எந்த இரத்தமும் நம் வேகத்துக்குத் தடைபோட அனுமதிக்கக் கூடாது' என நமக்கு நாமே மீண்டும் மீண்டும் சொல்லிக்கொள்ள வேண்டியிருக்கிறது என்கிறது அக்கட்டுரை.

- *'அட்சய திருதியை' நாளில் தங்கம் வாங்கினால், அது மேலும் மேலும் பெருகும்.* ***– நகைக்கடை விளம்பரங்கள்***

  *அப்படின்னா, கடைக்காரங்க தங்கத்தை வாங்கத் தானே வேண்டும்! ஏன், கூவிக் கூவி விக்குறாங்க?*

- *'அட்சயம்' என்றால், 'வளரும்' என்பது அர்த்தம். தங்கம்தான் வாங்க வேண்டுமென்பது அல்ல, எதை வாங்கினாலும் வளரும்.* ***– செய்தி***

  *அப்ப இந்தியா, உலக வங்கியிடம் கடன் வாங்குவதற்கும் அதுதான் உகந்த நாள்ன்னு சொல்லுங்க!*

## சோதிடம்

### – பெரியார்

இந்தியாவில் இந்துக்கள் சாமியாடுதல், வாக்குச் சொல்லுதல்; பூதம், பேய், பிசாசு என்பவை மனிதனை அடித்தல், மனிதனைப் பிடித்தல்; மந்திரம், மந்திரித்தல், பில்லி சூன்யம் செய்து பக்தர்களுக்குத் துன்பம், சாவு முதலியவை உண்டாக்குதல்; குட்டிச் சாத்தான், கருப்பு முதலியவைகளைக் கொண்டு சித்து விளையாடுதல், வசியம் செய்தல்; முன்பிறவி, மறுபிறவி உண்டெனல் – ஆகியவைகளில் நம்பிக்கைக் கொண்டு தங்கள் வாழ்க்கை நலத்திற்கென்றும், எதிரிகளின் கேட்டிற் கென்றும் எப்படித் தங்கள் பணத்தையும் நேரத்தையும் உபயோகிக்கின்றார்களோ அதுபோலவே – தங்கள் வாழ்க்கைக்குச் சோதிடம் என்னும் விஷயத்திலும் அதிக நம்பிக்கை வைத்துப் பணத்தையும், நேரத்தையும் செலவு செய்து வருகின்றார்கள். இதனால், மக்களின் வாழ்க்கைக் எவ்வளவோ கெடுதிகளும் ஏற்பட்டு வருவதைக் கண்கூடாய்ப் பார்க்கிறோம். எப்பொழுதுமே சோதிடன், மந்திரவாதி, கோயில் குருக்கள் ஆகிய மூவரும் மக்களின் பேராசைக்கும் முட்டாள்தனத்துக்கும் பங்குத் தாயாதிகளேயாவார்கள்.

எப்படியெனில், முதலில் சோதிடன், ஒருவனுடைய சாதகத்தைப் பார்த்துப் பலன் சொல்லுவதன்மூலம் கண்டம் நீங்கச் சாதியும், கிரகதோஷப் பரிகாரத்திற்குச் சாமிகளுக்கு அர்ச்சனை செய்யும்படியும் சொல்லுவான். இதைக் கேட்ட மனிதன் தன் ஆசைக்காகவும், பயத்திற்காகவும் மந்திரவாதியைக் கூப்பிட்டு சாந்தி கழிக்கச் சொல்லுவான். இந்த மந்திரவாதிகள் அநேகமாய் வைத்தியர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் சாந்தி கழிக்கக் கடைச் சாமான்கள் பட்டியல் போடும்

போதே – ஒரு மண்டலம் (48 நாள்), அரை மண்டலம் நவக்கிரகங்களுக்கோ அல்லது குறிப்பிட்ட சனி, செவ்வாய் முதலிய ஏதாவது ஒரு கிரகத்திற்கோ ஒரு சாமிக்கோ அர்ச்சனை; எள்ளு, பருத்திக் கொட்டை முதலிய தானம்; விளக்கு வைத்தல், அபிஷேகம் செய்தல் ஆகியவைகளையும்; ஏதாவது புண்ணிய புராணம் படித்தல் முதலியவைகளையும் சொல்லி விடுவான். இவைகளையெல்லாம் செய்வதால் மந்திரவாதிக்கும், அர்ச்சகனுக்கும் வரும் வரும்படியில் ஒரு பாகம் சோதிடனுக்குச் சேர்ந்துவிடும் ..........................
......................................................

பிறந்த காலம் என்பது வயிற்றுக்குள் இருக்கும்போது ஜீவன் (உயிர்) ஏற்பட்ட காலமா? அல்லது வயிற்றிலிருந்து பிறக்கும் காலமா? அப்படிப் பிறக்கும் காலத்தில் தலை வெளியில் தெரியும் காலமா? அல்லது, ஒரு நாள் அரைநாள் அக் குழந்தை கீழே விழாமல் கஷ்டப்படும் காலத்தில் தலை வெளியாகி, நிலத்தில்பட்டு, கால் நிலத்தில் விழாமல் தாய் சரீரத்தில் பட்டுக் கொண்டிருக்கும் காலமா? அல்லது கால், தலை ஆகிய எல்லாம் மருத்துவச்சி கையில் விழுந்த காலமா? அல்லது மருத்துவச்சி கையிலிருந்து கீழே விழுந்த நேரமா? என்பனவாகிய கேள்விகள் ஒருபுறமிருக்க – ஜீவனுடைய சரீர மெல்லாம் பூமியில் விழுந்த நேரம் என்பதாக வைத்துக் கொண்டே பார்ப்போ மானாலும், அந்த நேரத்தைச் சரியாக எப்படிக் கண்டு பிடிக்க முடியும்? குழந்தை கீழே விழுந்ததும் அது உயிருடன் இருக்கிறதா, இல்லையா? ஆணா, பெண்ணா? போன்றவைகளைப் பார்க்கச் சிறிது நேரமாவது செல்லும். பிறகு அந்தச் சேதியைக் கொண்டுவந்து வெளியிலிருக்கும் ஆண்களிடம் சொல்லச் சிறிது நேரமாவது செல்லும்; அந்தச் சேதியைக் கேட்டவன் நேரத்தைக் குறிக்க அங்கேயே அவனுக்குக் கடிகாரம் வேண்டும்; அந்தக் கடிகாரம் சரியான மணி காட்டுவதா என்பது தெரிய வேண்டும்; கடிகாரமில்லாவிட்டால், வானத்தைப் பார்த்து நேரம் கண்டு பிடிப்பதாயிருந் தால் அதற்குப் பிடிக்கும் நேரம் முதலியவை; அல்லது அக்கம் பக்கத்திலுள்ள கடிகாரம், அதுவுமில்லாவிட்டால், உத்தேச சுமார் நேரம் ஆகியவைகளின் தாமதங்களும், பிசகுகளும் எப்படி நேராமல் இருக்கமுடியும்? – 'பகுத்தறிவு' 1935


*வெளியீடு:*

**திராவிடர் விடுதலைக் கழகம்**

95 டாக்டர் நடேசன் சாலை

டாக்டர் அம்பேத்கர் பாலம்

மயிலாப்பூர், சென்னை-600004.

தொடர்புக்கு: 9941759641/9941613535/044-24980745

*மின்னஞ்சல்:* www.dvkperiyar.com